بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

مஸீஹ் மவ்வூது சிறப்பிதழ்

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ


தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-


# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL


இதழ் 9,10

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்

Postal Reg. No. GDP/001/2019-22

19 ரஜப் 1442 ஹிஜ்ரி கமரி 04 அமான் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி 04 மார்ச் 2021


اِذۡ بَعَثَ اللّٰہُ تَعَالٰی الۡمَسِیۡحَ ابۡنَ مَرۡیَمَ
فَیَنۡزِلُ عِنۡدَ الۡمَنَارَۃِ الۡبَیۡضَآءِ شَرۡقِیَّ دِمَشۡقَ

அல்லாஹ் மர்யமின் மகன் மஸீஹை அனுப்புவான். அவர் டமாஸ்கஸின் கிழக்கில் ஒரு வெள்ளை மினாராவுக்கு அருகில் இறங்குவார். (முஸ்லிம், கிதாபுல் ஃபித்ன்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பஞ்சாபிலுள்ள குர்தாஸ்பூர் மாவட்டத்தில் காதியான் அமைந்துள்ளது. அது டமாஸ்கஸிலிருந்து முற்றிலும் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. எனவே இந்த மினாரத்துல் மஸீஹும் டமாஸ்கஸிலிருந்து கிழக்குப் பக்கம் அமைந்துள்ளது என்பது நிரூபணமாகிறது. (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3)





மஸ்ஜித் முபாரக் (காதியான்)



மஸ்ஜித் அக்ஸா (காதியான்)



மஸ்ஜித் தாருஸ் ஸலாம் (U.K)



பைத்துல் ஆஃபியா (ஹாலந்து)



மஸ்ஜித் பைத்துன் நூர் (ஜெர்மனி)



மஸ்ஜித் மஹ்மூத் (சுவீடன்)




மஸ்ஜித் முபாரக் (ஜெர்மனி)



மஸ்ஜித் பைத்துல் முகீத் (U.K)

உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் இன்று உலகில் 213 நாடுகளில் நிலைபெற்றிருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ். உலகின் பல்வேறு நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக கட்டப்பட்டுள்ள சில பள்ளிவாசல்களின் அழகிய நிழற்படங்கள்

4

## பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | உண்மையான வாதம் அனைத்து அம்சங்கள் மூலமாகவும் வெளிப்படுகின்றது | 1 |
| 2. | நபிமொழியிலிருந்து.... | 3 |
| 3. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து.... | 4 |
| 5. | மினாரத்துல் மஸீஹ் கட்டுமானத்தின் வரலாறு – குறைந்தபட்சம் சந்தா கொடுத்த நூறு நபர்களின் பெயர்கள் | 5 |
| 6. | சூரிய சந்திர கிரகண முன்னறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் | 12 |
| 7. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் – கடந்த கால சான்றோர்களின் முன்னறிவிப்பின் ஒளியில் | 16 |


لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வெகுமதி அறைகூவல்

## ஒவ்வொரு எதிரியையும் நாம் போட்டிக்கு அழைத்தோம்

اِنَّ السُّمُوْمَ لَشَرُّ مَا فِي الْعَالَمِ ۞ شَرُّ السُّمُوْمِ عَدَاوَةُ الصُّلَحَاءِ

### سِرُّ الْخِلَافَةِ (சிர்ருல் கிலாஃபா) புத்தகத்தில் தவறுகளை கண்டுபிடிப்பவர்களுக்கு ஒவ்வொரு தவறுக்கும் ஒரு ரூபாய் பரிசு

மவ்லவி முஹம்மத் ஹுஸைன் பட்டாலவிக்கு ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஒரு தனிப்பட்ட பகைமை இருந்தது. அவர் பராஹீனே அஹ்மதிய்யா புத்தகத்திற்கு மதிப்புரை எழுதியிருந்தார். அவர் அந்த மதிப்புரையில் மிகவும் அழுத்தமான சொற்களில் ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரின் புத்தகமான பராஹீனே அஹ்மதிய்யாவிற்கு ஆதரவு வழங்கியிருந்தார். ஆனால் உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் பராஹீனே அஹ்மதிய்யா புத்தகம் பிரபல்யமானதற்கு காரணம் முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் மதிப்புரை அல்ல. மாறாக, புத்தகம் பிரபல்யமானதற்கு காரணம், நேடியாக உள்ளத்தில் சென்று அமர்ந்து விடக்கூடிய அந்தப் புத்தகத்தின் வலிமைமிக்க ஆதாரங்களாகும். மேலும் ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரபல்யத்திற்கு காரணம் அன்னாரின் நன்மை, இறையச்சம், அல்லாஹ்வின் புறமிருந்து அன்னாரின் இயல்பில் வைக்கப்பட்டிருந்த ஓர் எல்லையற்ற ஆன்மீக ஈர்ப்பும், ஒரு சிறப்பான கவர்ச்சியும் ஆகும். அதுமட்டுமல்லாமல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாத்தின் ஒரு வலிமைமிக்க பயில்வானாகவும், தன்னிலைமாறாத தளபதியாகவும் திகழ்ந்தார்கள். அன்னாருக்கு முன்னால் நிற்பதற்கு கூட எவருக்கும் தைரியம் இல்லாமல் இருந்தது. இதுவும் அன்னார் பிரபல்யம் அடைந்ததற்கு ஒரு பெரிய காரணமாகும். முஹம்மது ஹுஸைனின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், அன்னாரின் புத்தகம் பிரபல்யமானதற்கு தனது மதிப்புரைதான் காரணம் என்று அவர் புரிந்து கொண்டிருந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் **1890** ஆம் ஆண்டு தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன் என்று வாதம் செய்தபோது என்னிடம் ஆலோசனை செய்யாமல் அவர் எப்படி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதிடலாம் என முஹம்மது ஹுஸைன் வெகுண்டெழுந்தார். ஒரு நீண்ட நெடிய விவாதத்திற்குப் பிறகு முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி இவ்வாறு எழுதினார்: இஷாஅத்துஸ் சுன்னாவின் ஒரு கடமை உள்ளது. மேலும் அதன் மீது ஒரு கடனும் உள்ளது. அது என்னவென்றால், எவ்வாறு பழைய பார்வையில் இவரை (அதாவது ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை) விண்ணிற்கு உயர்த்தினோமோ அதேபோன்று இவரின் புரிய வாதங்களின் பார்வையின் அடிப்படையில் அவரை நாம் பூமியில் வீழ்த்த வோண்டும். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 386)

முஹம்மத் ஹுஸைன் பட்டாலவி தன்னையும் தனது பத்திரிகையான இஷாஅத்துச் சுன்னாவையும் ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்ப்பத்தில் அர்ப்பணித்துக் கொண்டார்.

ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவருக்கு இவ்வாறு பதில் எழுதினார்கள்: உங்களைப் போன்ற நண்பர் கூட எதிர்க்க துவங்கி விட்டதால் எனக்கு சிறிதும் துன்பமும், கவலையும் இல்லை. நான் தனித்தவன். என்னுடன் இறைவன் இருக்கின்றான். நேற்று நான் எனது கரத்தால் என்னை குறித்து எழுதியிருப்பதை கண்டேன். மேலும் அத்துடன் எனக்கு اِنَّ مَعِيَ رَبِّيْ سَيَهْدِيْنِ இல்ஹாமும் இறங்கியது. எனவே இறைவன் தன் புறமிருந்து ஏதாவது சான்றை வெளிப்படுத்துவான் என்பதை நான் அறிந்துள்ளேன். நான் உங்களுக்காக துஆ செய்வேன். ஆனால் உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது அனைத்தும் உங்களது கைகளால் முழுமையாகுவது அவசியமாகும்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 386)

முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் எதிர்ப்பின் வழிமுறைகள் மிகவும் கீழ்த்தரமானதாகவும், மோசமானதாகவும் இருந்ததை எண்ணி நாம் மிகவும் வருந்துகிறோம். அதில் கலப்பற்ற தன்மை என்பது பெயரளவில் கூட இடம் பெறவில்லை. ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்ப்பதில் முஹம்மது ஹுஸைன் அனைத்து நல்லொழுக்க

எல்லைகளையும் மீறி விட்டார். எல்லையில்லா பொய்களை பயன்படுத்தினார். அவருடைய பொய்யான குற்றச்சாட்டுகளில் ஒரு குற்றச்சாட்டு இதுவாகும். அதாவது ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபி மற்றும் திருக்குர்ஆன் ஞானத்தை முற்றிலும் அறியாதவர் ஆவார்கள்.

இதற்கு பதிலடியாக ஸய்யிதுனா ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனக்கு போட்டியாக திருக்குர்ஆனுக்கு தஃப்ஸீர் எழுதுவதற்கான அறைகூவலை விடுத்தார்கள். கிராமத்துஸ் ஸாதிகீன் மற்றும் நூருல் ஹக் என்ற இரண்டு புத்தகங்களை தெளிவான அரபியில் அன்னார் எழுதியிருந்தார்கள். மேலும் அதுபோன்று ஒரு புத்தகத்தை எழுதும்படி அறைகூவல் விடுத்தார்கள். மேலும் அதற்காக பெரும் வெகுதிகளையும் பரிசாக அறிவித்தார்கள்.

அதன் பிறகு ஸய்யிதுனா ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிர்ருல் கிலாஃபா என்ற அரபி புத்தகத்தையும் எழுதினார்கள். மேலும் 27 ரூபாய் அதற்கு பரிசாக அறிவித்தார்கள். அதன் தவறுகளை கண்டுபிடித்துக் காட்டினால் ஒவ்வொரு தவறுக்கும் ஒரு ரூபாய் என்று வெகுமதியை நிர்ணயித்தார்கள். பின்னர் அந்த வெகுமதியை அதிகரித்து இரண்டு ரூபாய் தருவதாக அன்னார் அறிவித்தார்கள்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வெகுமதி அறிவிப்பு தொடர்பாக அன்னாரின் வழிகாட்டுதல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அன்னார் (அலை) அவர்கள் முஹம்மத் ஹுஸைன் பட்டாலவியை நோக்கி இவ்வாறு கூறுகின்றார்கள்:

மிகவும் நன்மையை விரும்பிய நிலையில் இருந்து கொண்டு மீண்டும் நான் இறுதி அழைப்பு கொடுக்கின்றேன். முந்தைய புத்தகங்களுக்கு எதிராக நம்பிக்கை இழந்து விட்ட ஷேக் சாஹிப் அவர்களை நோக்கி சிர்ருல் கிலாஃபா புத்தகத்தின் பக்கம் வரும்படி நான் அழைக்கின்றேன். தங்களுக்கு 27 நாட்கள் அவகாசமும், 27 ரூபாய் ரொக்கமும் வெகுமதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான் இந்த பணத்தை உங்களிடம் ஒப்படைப்பதற்கு தயாராக இருக்கின்றேன். நீங்கள் கேட்டு, அதனை அனுப்பாவிட்டால் நாம் பொய்யர் ஆவோம். எம்மால் முன்னரே பணத்தை அனுப்பி வைக்க முடியும். ஆனால் நான் 27 நாட்களில் உங்களது புத்தகத்திற்கு எதிராக புத்தகத்தை வெளியிட்டு விடுவேன் என்று நீங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தை வெளியிட வேண்டும்.

தாங்கள் இந்த அவகாசத்திற்குள் வெளியிட்டு விட்டால் பின்னர் தாங்கள் 27 ரூபாயை மட்டும் வெகுமதியாக பெற மாட்டீர்கள். மாறாக, நாம் பொதுவான ஓர் அறிவிப்பை வெயிடுவோம். அதில் நாம் இவ்வாறு கூறுவோம். அதாவது இத்தனை நாட்களாக நாம் தங்களை ஷேக்; ஷேக் என்று அழைத்து வந்தோம். மேலும் மவ்லவி முஹம்மது ஹுஸைன் என்று கூறவில்லை. அது எமது பெரும் தவறாகும். இன்னும் கூறப்போனால், தாங்கள் உள்ளபடியே ஒரு பெரும் அறிஞரும், இலக்கியவாதியும் ஆவீர்கள். தாங்கள் ஹதீஸிற்கு என்ன பொருளை புரிந்து வைத்துள்ளீர்களோ அதையே ஒப்புக் கொள்வதற்கு தாங்கள் தகுதி படைத்தவர் ஆவீர்கள்.

இப்போது பாருங்கள். ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இதில் எந்த அளவுக்கு வெற்றி கிடைத்துள்ளது. இதன் பிறகு பணத்தை ஒன்று சேர்ப்பதற்காக மக்களுக்கு தொல்லைக் கொடுப்பதற்கு தங்களுக்கு எந்த அவசியமும் இருக்காது. அல்லது அந்த பணியை ராஜினாமா செய்வதற்கு தாங்கள் தயாராகி விடுங்கள். ஏனென்றால் தாங்கள் என்னுடன் போட்டி போட்டு எனது இல்ஹாமை பொய்ப்படுத்தி விடுகின்ற நிலையில் என்னிடம் எதுவும் எஞ்சியிருக்காது.

நான் தங்களிடம் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். உங்களுக்கு அரபியில் ஓர் அணு அளவு அறிவு இருக்குமென்றால் இந்த முறை நீங்கள் ஒருபோதும் முகம் திருப்பக்கூடாது. எனது இந்த புத்தகத்தில் சில தவறுகள் நிரூபணமாகி விட்டல் உங்களுக்கு எதிரான புத்தகத்தில் எந்த அளவுக்கு தவறுகள் இருக்குமோ ஒவ்வொரு தவறுக்கும் ஒரு ரூபாய் உங்களுக்கு வழங்கப்படும். 1894 ஜூலை 25 வரை இந்த விண்ணப்பத்திற்கு அவகாசம் உள்ளது. தாங்கள் 1894 ஜூலை 25ற்குள் இந்த விண்ணப்பத்தை அச்சடித்து ஒரு பிரசுரம் மூலமாக அனுப்பவில்லை என்றால் தாங்கள் இதிலிருந்தும் ஓடி விட்டீர்கள் என்று புரிந்து கொள்ளப்படும்.

(சிர்ருல் கிலாஃபா ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 417)

ஹஸ்ரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் வாசகர்களுக்கு நம்பிக்கையூட்டுகின்றேன். ஷேக் பட்டாலவி அரபி மொழி ஞானத்திலிருந்து முற்றிலும் விலகியவராக இருக்கின்றார். எவர்கள் புதிய மொழியையும், பழைய அரபி மொழி வழக்கையும் முற்றிலும் அறிந்து புலமை பெற்றிருக்கின்றாரோ அவரால் மட்டுமே தவறுகளை கண்டுபிடிக்க முடியும். அவருக்கு முன்னால் ஆயிரக்கணக்கான அரபி கவிதைகள் இருக்க வேண்டும். தத்பா மற்றும் இஸ்தக்ரா எனும் திறமைகள் அவருக்கு இருக்க வேண்டும்.

ஆனால் உருது மொழி மட்டுமே அறிந்த இந்த ஷேக் இலக்கண அறிவு மற்றும் மொழிப்புலமை பற்றி எங்கனம் அறிவார். அந்த அறிஞர் 200, 400 அரபிக் கவிதைகளை எழுதி வெளியிட்டிருக்கின்றார் என்று யாராவது கண்டோ அல்லது கேட்டோ இருக்கின்றாரா? தெளிவுமிக்க ஒரு கவிதை வரியை கூட அவரால் எழுத முடியும் அல்லது ஒரு வாக்கியத்தை தெளிவான அரபியில் அவரால் எழுத முடியும் என்று எனக்கு ஒருபோதும் ஒருபோதும் நம்பிக்கை கிடையாது. ஆயினும் நிச்சயம் அவர் உருது மொழி அறிந்தவர் ஆவார்.

(கராமத்துஸ் சாதிகீன், ரூஹானீ கஸாயின் தொகுதி 7 பக்கம் 63)

(உருது – மன்ஸூர் அஹ்மத் மஸ்ரூர்)

(தமிழில் – துணை ஆசிரியர்)

## ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் கூட பாரசீக மனிதர் ஒருவர் அங்கிருந்து திரும்ப கொண்டு வருவார்

**(நபிமொழியிலிருந்து....)**

وَلَمَّا ضُرِبَ ابْنُ مَرْيَمَ مَثَلًا إِذَا قَوْمُكَ مِنْهُ يَصِدُّونَ ○ وَقَالُوا أَآلِهَتُنَا خَيْرٌ أَمْ هُوَ ۚ مَا ضَرَبُوهُ لَكَ إِلَّا جَدَلًا ۚ بَلْ هُمْ قَوْمٌ خَصِمُونَ ○ إِنْ هُوَ إِلَّا عَبْدٌ أَنْعَمْنَا عَلَيْهِ وَجَعَلْنَاهُ مَثَلًا لِبَنِي إِسْرَائِيلَ ○ وَلَوْ نَشَاءُ لَجَعَلْنَا مِنْكُمْ مَلَائِكَةً فِي الْأَرْضِ يَخْلُفُونَ ○

பொருள்: மர்யத்தின் மகன் ஓர் உவமையாக எடுத்துரைக்கப்படும்பொழுது உமது உமுதாயத்தினர் அதனைக் குறித்துக் கூச்சலிடத் தொடங்குகின்றனர். எங்கள் கடவுளர் சிறந்தவர்களா அல்லது அவர் சிறந்தவரா என்றும் அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் உம்மிடம் விவாதம் செய்வதற்காகவே இதனைக் கூறுகின்றனர். உண்மையிலேயே அவர்கள் சண்டையிடும் சமுதாயத்தினராவர். அவர் எம்முடைய அடியாராகவே விளங்கினார். அவருக்கு நாம் அருள் செய்து, அவரை இஸ்ராயீலின் மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக ஆக்கினோம். நாம் விரும்பியிருந்தால் உங்களிடமிருந்தும் சிலரைப் பூமியில் உங்கள் இடத்தில் (வாழ்ந்து வரும்) வானவர்களாக ஆக்கியிருப்போம். (43:58–61)

இந்த வசனத்திற்கு விரிவுரையாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: (1) அதாவது திருக்குர்ஆனில் இப்னு மர்யம் திரும்ப வருகின்ற செய்தியைப் படிக்கின்றபோது கூச்சலிடுகின்றனர். அவர் எங்களது தெய்வங்களை விட பெரியவரா? எங்களது தெய்வங்களை நரகத்தில் வீசி விட்டு அவர் உலகத்தின் சீர்திருத்தத்திற்காக திரும்ப கொண்டு வரப்படுகின்றாரா? உள்ளபடியே இந்த இரண்டு சம்பவத்திலும் வானம் மற்றும் பூமிக்கான வித்தியாசம் உள்ளது. மஸீஹ் (அலை) அவர்கள் சுயமே தன்னை ஓர் அடியாராக ஒப்புக் கொள்கின்றார்கள். அவர் ஒரு நல்லடியாராக இருந்தார். அவரை இணை வைப்பவர்களுடனும், இணை வைப்பவர்களின் தலைவர்களுடனும் ஒப்பிடக் கூடாது.

(2) எமது தெய்வங்கள் என்பதன் பொருள், இறைவனுக்கு எதிரில் எவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றதோ அவர்களுக்கு முன்னால் சஜ்தா செய்யவில்லை என்றாலும் சரியே அவர்கள் எமது தெய்வங்கள் என்ற வட்டத்தில் வந்து விடுவார்கள். இன்றைய காலத்து இணை வைப்பவர்களான அதாவது ஷியாக்கள் போன்றோர் இவ்வாறு கூறுகின்றனர்: அதாவது மஹ்தி வந்தவுடன் அனைத்து தூதர்களும் உயிர் பெற்று விடுவார்கள். மேலும் அவருக்கு கட்டுப்படுவார்கள்.

(3) அதாவது மஸீஹின் மீது மலக்குகள் இறங்கினர். ஏனென்றால் அவர் ஆன்மீக ரீதியில் மலக்காக ஆகி இருந்தார். ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்து மக்களோ அல்லது அன்னாருக்குப் பின் தோன்றிய மக்களோ மஸீஹைப் போன்று ஆகியிருந்தால் அவர்களிடமும் வானவர்கள் இறங்கத் தொடங்கி இருப்பார்கள். அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. தற்காலத்து முஸ்லிம்கள் பிடிவாதத்தின் காரணமாக மட்டுமே இந்த சாத்தியக்கூறை நிராகரிக்கின்றனர்.

(தஃப்ஸீரே கபீர் பக்கம் 816)

وَالنَّجْمِ إِذَا هَوَىٰ ○ مَا ضَلَّ صَاحِبُكُمْ وَمَا غَوَىٰ ○

பொருள்: (கார்த்திகை) நட்சத்திரத்தை, அது (பொருளளவில்) கீழ்வரும்போது சான்றாகக் காட்டுகிறேன். உங்கள் தோழர் தவறிழைக்கவில்லை; வழிகேட்டில் செல்லவுமில்லை. (53:2,3)

இந்த வசனத்திற்கு விரிவுரையாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: (1) இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட முன்னறிவிப்பின் இந்த சொற்கள்,

لَوْ كَانَ الْإِيمَانُ مُعَلَّقًا بِالثُّرَيَّا لَنَالَهُ رَجُلٌ مِنْ فَارِسَ

என்று இடம் பெற்றுள்ளன. ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் கூட பாரசீக மனிதர் ஒருவர் அங்கிருந்து திரும்ப கொண்டு வருவார்.

(2) அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை முழுமையானதாக இருந்தது என்பது அந்த நபர் தோன்றியவுடன் அனைவருக்கும் வெளிப்பட்டு விடும். அன்னார் வழிதவறியவராகவும் இருக்கவில்லை; மன இச்சைகளை பின்பற்றக் கூடியவராகவும் அன்னார் இருக்கவில்லை என்பதும் வெளிப்பட்டு விடும்.

(தஃப்ஸீரே கபீர் பக்கம் 877)

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நபிமார்களுக்கிடையிலான தொடர்பு ஒன்றுவிட்ட சகோதரர்களைப் போன்றதாகும். அதாவது அவர்களின் தந்தை ஒருவராகவும், அன்னை வெவ்வேறானவர்களும் ஆவர். மக்களில் எனக்கு ஈஸா இப்னு மர்யத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஏனென்றால் எனக்கும் அவருக்கும் இடையில் எந்த நபியும் இல்லை.... அவர் தோன்றி சிலுவையை முறிப்பார். (அதாவது சிலுவைக் கொள்கையை பொய்ப்படுத்துவார்). பன்றியைக் கொல்லுவார். (அதாவது தீய இயல்புடைய மக்களின் அழிவிற்கு காரணியாக இருப்பார். எனவே அவர் மூலமாக சிலுவைக் கொள்கையின் வெற்றி முடிவு கட்டப்பட்டும். மேலும் பன்றி இயல்பு உள்ள மக்களுக்கும் முடிவு கட்டப்படும்). ஜஸ்யா வரியை நீக்குவார். (அதாவது அவரது காலத்தில் மார்க்கப் போர்கள் முடிவு பெறும்.) அவரது காலத்தில் இஸ்லாத்தை தவிர்த்து மற்ற அனைத்து மார்க்கங்களை (அதாவது ஆன்மீக ரீதியாகவும் பொலிவின் அடிப்படையிலும்) அல்லாஹ் அழித்து விடுவான். மேலும் பொய்யான மஸீஹுத் தஜ்ஜாலை அழித்து விடுவான். ஒட்டகம் சிங்கத்துடனும், சிறுத்தை பசுக்களுடனும், நரிகள் ஆடுகளுடன் ஒன்றாக மேய்கின்ற அளவில் அக்காலம் அமைதி நிறைந்த காலமாக இருக்கும். குழந்தைகள், இளைஞர்கள் பாம்புகளுடன் விளையாடுவர். எனவே அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அல்லாஹ் நாடுகின்ற வரை மஸீஹ் உலகில் வசிப்பார். பின்னர் மரணமடைந்து விடுவார். முஸ்லிம்கள் அவரது ஜனாஸா தொழுகையை தொழுவர். மேலும் அவர் நல்லடக்கம் செய்யப்படுவார். (அபூதாவூது.)

**ஒரு நபர் திருக்குர்ஆனின் போதனைகளிலிருந்து ஓர் அணுவின் ஆயிரமாவது பங்கில் சிலவற்றை குறைகளாக எடுத்துக் காட்டினாலோ அல்லது திருக்குர்ஆனின் போதனைகளுக்கு எதிராக தனது ஒரு புத்தகத்தின் சிறப்பை அணு அளவாவது நிரூபணம் செய்து விட்டாலோ நாம் மரண தண்டனையை ஏற்பதற்கு தயாராக இருக்கின்றோம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து.....**

### இன்று வரை திருக்குர்ஆனுடன் எவரும் போட்டி போட முடியவில்லை

திருக்குர்ஆனுக்கு எதிரில், பெரும் மொழிப்புலமை பெற்றவர்கள் என்றும், நாட்டின் பெரிய கவிஞர்கள் என்றும் அழைக்கப்பட்ட எல்லா நிராகரிப்பாளர்களும் கூட வாயை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். இப்போதும் கூட மௌனமாகவும், வாயடைத்தும் அமர்ந்துள்ளனர். இந்த மௌனமே அவர்களின் இயலாமைக்கு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் இயலாமை என்பது வேறு என்னவாக இருக்க முடியும்? அதாவது எதிர் தரப்பின் ஆதாரங்களை புரிந்து கொண்டு அதை முறியடித்துக் காட்ட முடியாததே இயலாமையாகும்.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 1, பக்கம் 152 அடிக்குறிப்பு எண் 11)

### திருக்குர்ஆனின் மூன்று சிறப்புகள்

திருக்குர்ஆனில் மூன்று பண்புகள் உள்ளன. முதலாவது, மக்கள் அறியாமல் இருந்த மார்க்க ஞானங்களின் பக்கம் திருக்குர்ஆன் வழிகாட்டுகின்றது. இரண்டாவது, எந்த ஞானங்களில் ஏற்கனவே சிறிது உடன்பாடு இருந்ததோ அதனை விரிவாக திருக்குர்ஆன் எடுத்துரைக்கின்றது. மூன்றாவதாக, எந்த விவகாரங்களில் கருத்து வேறுபாடும், முரண்பாடுகளும் உருவாகி விட்டதோ அவற்றில் தெளிவான கூற்றை எடுத்துரைத்து உண்மையையும், பொய்யையும் வேறுபடுத்திக் காட்டுகின்றது.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 225 அடிக்குறிப்பு எண் 11)

### திருக்குர்ஆனில் ஏதாவது குறையை எடுத்துக் காட்டுங்கள்

ஒரு நபர் திருக்குர்ஆனின் போதனைகளிலிருந்து சில குறைகளை எடுத்துக் காட்டவோ அல்லது திருக்குர்ஆனின் போதனைக்கு எதிராக தனது ஒரு புத்தகத்தின் சிறப்பை அணு அளவாவது நிரூபணம் செய்து விட்டால் நாம் மரண தண்டனையை ஒப்புக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம்.

இப்போது நீதிமான்களே பாருங்கள். இறைவனுக்காக உள்ளத்தை சிறிது சுத்தம் செய்து விட்டு சிந்தியுங்கள். எமது எதிரிகளின் நேர்மையும், இறையச்சமும் எவ்வகையானது என்று பாருங்கள். பதிலளிக்க முடியாமல் போன பிறகும் கூட வீணான பேச்சுகளிலிருந்து விலகுவதில்லை.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 198 அடிக்குறிப்பு எண் 2)

### அனைத்து உண்மைத்துவமும் இன்ஜீலில் இல்லை

இன்ஜீலின் போதனை முழுமையானது என்று எண்ணம் கொள்வது முற்றிலும் தவறானதும், குறை மதியும் ஆகும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மஸீஹ் (அலை) அவர்களே இன்ஜீலின் போதனைகளை குறைகளுக்கு அப்பாற்பட்டது என்று கருதவில்லை. அன்னார் இவ்வாறு கூறினார்கள்: இன்னும் அநேகங் காரியங்கள் உள்ளன. ஆனால் அவைகளை நீங்கள் தாங்கிக் கொள்ள மாட்டீர்கள். அவர் வரும்போது (அதாவது பரிசுத்த ஆவியான அவர் வரும்போது) உங்களுக்கு அனைத்து சத்தியங்களின் வழிகளையும் எடுத்துரைப்பார். (புதிய ஏற்பாடு, யோவான் அதிகாரம்: 16 வசனம் 12,13,14). இப்போது நீங்களே கூறுங்கள். இந்த இன்ஜீல் தான் அனைத்து மார்க்க உண்மைத்துவத்தின் மீதும் மேலோங்கி நிற்கின்றதா? அப்படிப்பட்ட இன்ஜீல் இருக்கின்றபோது திருக்குர்ஆனின் அவசியம் இல்லை என்று நீங்கள் கூறுகின்றீர்களா?

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 300 அடிக்குறிப்பு எண் 2)

### இறைஞானத்திற்கான ஏற்பாடுகள் திருக்குர்ஆனில் உள்ளது. இன்ஜீலில் இல்லை

நீங்கள் உங்களை மஸீஹை பின்பற்றுபவர்களாக கூறிக்கொண்டு, எதனை 1882 ஆண்டுகளுக்கு முன்பு மஸீஹ் எதனை சுயமே குறையுடையதாக கூறியிருக்கின்றாரோ அதனை நீங்கள் முழுமையானதாக ஆக்கிக் கொள்வது உங்களுக்கு அழகல்ல. உங்களுக்கு மஸீஹின் கூற்றின் மீது நம்பிக்கை இல்லை என்றால், திருக்குர்ஆனுக்கு எதிராக இன்ஜீலை நீங்கள் முன்னெடுக்க நீங்கள் விரும்புகின்றீர்கள் என்றால், பின்னர் வாருங்கள்! ஆரம்பிப்போம் பிஸ்மில்லாஹ். நாம் இதே புத்தகத்தில் திருக்குர்ஆன் தொடர்பான சிறப்புகளை நிரூபணம் செய்து காட்டியிருக்கின்றோம். நீங்கள் இன்ஜீலிலிருந்து அந்த சிறப்புகளை எடுத்துக் காட்டுங்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் இறைஞானத்திற்கான ஏற்பாடு திருக்குர்ஆனில் உள்ளதா? அல்லது இன்ஜீலில் உள்ளதா என்பதை நீதியில் நிலைநிற்கின்ற மக்கள் சுயமே கண்டு கொள்வர்.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 301 அடிக்குறிப்பு எண் 2)

### திருக்குர்ஆனின் உண்மைத்துவத்தை நிரூபிப்பது எமது பொறுப்பாகும்

திருக்குர்ஆன் அனைத்து இறைஞானங்களின் மீதும் மேலோங்கி நிற்கின்றது என்பதில் ஐயம் இருக்குமென்றால் நாம் இதற்கு பொறுப்பேற்றுக் கொள்கின்றோம். அதாவது ஒருவர் உண்மையை தேடுபவராக திகழ்ந்து அதாவது இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதாக எழுத்தில் வாக்குறுதி வழங்கி இப்ரானி, யூனானி, லத்தீனி, ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்றவற்றிலிருந்து சிறிது மார்க்க உண்மைத்துவங்களை எடுத்துக் காட்டினால் அல்லது தனது சுய அறிவின் ஆற்றலால் மிகவும் நுட்பத்திலும் நுட்பமான இறை விஷயங்களை எடுத்துக்காட்டினால் நாம் அதனை திருக்குர்ஆனிலிருந்தே எடுத்துக் காட்டி விடுவோம்.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 301 அடிக்குறிப்பு எண் 2)

# மினாரத்துல் மஸீஹ் கட்டுமானத்தின் வரலாறு – குறைந்தபட்சம் சந்தா கொடுத்த கண்ணியத்திற்குரிய நூறு நபர்களின் பெயர்கள்

முஹம்மத் ஹமீத் கவ்ஸர்– இன்சார்ஜ், அஹ்மதிய்யத்தின் வரலாற்றுத் துறை
தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர், துணை ஆசிரியர் பதர் பத்திரிகை

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மற்றும் உறுதிமொழி அளிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை தொடர்பாக ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் செய்திருந்த முன்னறிவிப்புகளில் இந்த குறிப்பும் இடம் பெற்றுள்ளது.

''اِذْبَعَثَ اللهُ الْمَسِيْحَ ابْنَ مَرْيَمَ فَيَنْزِلُ عِنْدَ الْمَنَارَةِ الْبَيْضَآءِ شَرْقِيَّ دِمَشْقَ''

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபித்ன்)

அதாவது அல்லாஹ் மஸீஹ் இப்னு மர்யமை (போன்ற) அதாவது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை அனுப்புவான். அப்போது அவர் டமாஸ்கஸிலிருந்து கிழக்கில் அமைந்திருக்கும் ஒரு வெள்ளை மினாராவுக்கு அருகில் இறங்குவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த முன்னறிவிப்பை செய்து கொண்டிருந்தபோது டமாஸ்கஸில் எந்த வெள்ளை மினாராவும் இருந்திருக்கவில்லை. எத்தனை மினாராக்கள் கட்டப்பட்டனவோ அவை அனைத்தும் அதற்குப் பிறகே கட்டப்பட்டுள்ளன. இதற்கு வரலாறு சாட்சியாகும். மினாரா என்ற சொல் நூர் என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது.

''اَلْمَنَا رَةُ الْبَيْضَآء'' (வெள்ளை மினாரா) என்பதன் ஒரு பொருள் என்னவென்றால், முஹம்மதிய்ய சமூதாயத்தில் அல்லாஹ் எவரை மஸீஹைப் போன்றவராக ஆக்கி அனுப்பி வைப்பானோ அவருக்கு இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்துவதற்கு ஒளிமயமான மற்றும் தெள்ளத் தெளிவான சான்றுகளுடன் அனுப்பப்படுவார். அவரது ஒளிமயமான சான்றுகளுக்கு முன்னால் பொய்யான மார்க்கத்தின் இருளான சான்றுகள் அழிந்து விடும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து வெளிப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) (1835 – 1908) அவர்களின் மூலம் அல்லாஹ் உண்மைப்படுத்தி காட்டி விட்டான் என்பதற்கு நல்லியல்வு படைத்த மக்கள் சாட்சியாக உள்ளனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொய்யான மார்க்கங்களின் இருளான சான்றுகளை ஒளிமயமான சான்றுகளால் ரத்து செய்து விட்டார்கள் என்பதற்கு அன்னாரின் புத்தகங்களும், எழுத்துக்களும், மல்ஃபூஸாத் மற்றும் கடிதங்களும், பிரசுரங்களும் சாட்சியங்களாக உள்ளன. இந்த முன்னறிவிப்பை வெளிப்படையாக முழுமை செய்வதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்டுமான திட்டத்தை ஏற்படுத்தினார்கள்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை முழுமை செய்வதற்காக மினாரா கட்டுமானத் திட்டம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காதியானில் மினாரா கட்டுமானத்திற்கான திட்டத்தை அறிவித்தவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

(1) இந்த முன்னறிவிப்பை முழுமை செய்வதற்கு இஸ்லாத்தில் இரண்டு முறை முயற்சி செய்யப்பட்டுள்ளது. முதன் முதலில் ஹிஜ்ரி 741 ஆம் ஆண்டுக்கு முன்பாக டமாஸ்கஸின் கிழக்குப் பகுதியில் பளிங்கு கற்களால் ஒரு மினாரா உருவாக்கப்பட்டது. அது டமாஸ்கஸின் கிழக்குப் பக்கம் மற்றும், ஜாமிஃ உமவியின் ஒரு பகுதியாகவும் உள்ளது. பல லட்சம் ரூபாய் அதற்கு செலவிடப்பட்டதாக கூறுகின்றனர். அதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு முழுமை செய்யப்பட வேண்டும் என்பதே அதைக் கட்டியவர்களின் நோக்கமாக இருந்தது என்று கூறுகின்றனர். ஆனால் அதன் பிறகு நஸராக்கள் (கிறிஸ்துவர்கள்) அந்த மினாராவை எரித்து விட்டனர்.

அடுத்து இந்த விபத்திற்குப் பிறகு ஹிஜ்ரி 741 ஆம் ஆண்டு மீண்டும் இந்த முயற்சி செய்யப்பட்டது. டமாஸ்கஸின் (திமஸ்கின்) கிழக்குப் புறம் அந்த மினாராவை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டது. எனவே அந்த மினாராவிற்காகவும் சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரை ஆயத்தம் செய்யப்பட்டது. ஆனால் அல்லாஹ்வின் இறை நியதிக்கேற்ப ஜாமிஆ உமவியில் தீ பிடித்து விட்டது. இவ்வாறு அந்த மினாராவும் எரிந்து விட்டது. சுருக்கமாக, இரண்டு முறையும் முஸ்லிம்கள் இந்த எண்ணத்தில் தோல்வியுற்றிருந்தனர். (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 3 பக்கம் 315, 1 ஜூலை 1900)

(2) இது எப்படிப்பட்ட நோக்கத்தை கொண்டது என்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிஸ்ரா போர் செல்வங்களிலிருந்து கிடைத்த தங்க வலையளை ஒரு முன்னறிவிப்பை நிறைவு செய்து விட வேண்டும் என்பதற்காக ஒரு சஹாபிக்கு அணிவித்தார்கள். இது அதைப் போன்றதாகும். (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 3 பக்கம் 316)

## மினாரா கட்டுமானத்தின் மூன்று அடிப்படை நோக்கங்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மினாரா கட்டுமானத்திற்கு மூன்று அடிப்படையான நோக்கங்களை எழுதியுள்ளார்கள்: முதலாவது என்னவென்றால், பாங்கு கொடுப்பவர் அதன் மீது ஏறி நின்று ஐவேளையும் தொழுகைக்கான பாங்கை (அழைப்பு) கொடுக்க வேண்டும். ஏனென்றால் அதன் மூலம் இறைவனின் தூய பெயர் உரத்த குரலில் இரவும், பகலும் ஐந்து முறை பரப்பப்பட வேண்டும். மேலும் சுருக்கமான சொற்களில் ஐவேளை நம் புறமிருந்து மனிதர்களுக்கு இந்த அழைப்பு கொடுக்கப்பட வேண்டும். அதாவது மனிதர்கள் அனைவரும் வணங்க வேண்டிய நிலையான இறைவன் அவனே ஆவான். அந்த இறைவனின் நல்லடியாரும், தூய தூதருமான முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த இறைவனின் பக்கம் வழிகாட்டியுள்ளார்களோ அந்த இறைவனே வணங்குவதற்கு தகுதி படைத்தவன் ஆவான். அவனைத் தவிர்த்து பூமியிலும், வானத்திலும் வேறு எந்த இறைவனும் இல்லை.

(ரூஹானீ கஸாயின் தொகுதி 16 குத்பா இல்ஹாமிய்யா பக்கம் 16)

இந்த மினாராவின் இரண்டாவது நோக்கம் இதுவாகும். அதாவது இந்த மினாராவின் சுவரின் ஓர் உயர்ந்த பகுதியில் ஓர் ஒளி விளக்கு பொருத்தப்பட வேண்டும். அதன் விலை சுமார் 100 ரூபாயாகவோ அல்லது அதை விட சிறிது அதிகமாகவோ இருக்கலாம். மனிதர்களின் கண்களை ஒளியூட்டுவதற்காக நெடும் தூரம் வரை இந்த ஒளி செல்ல வேண்டும்.

(ரூஹானீ கஸாயின் தொகுதி 16 குத்பா இல்ஹாமிய்யா பக்கம் 16)

இந்த மினாராவின் மூன்றாவது நோக்கம் என்னவென்றால் இந்த மினாராவின் சுவரின் உயரமான பகுதியில் 400 அல்லது 500 ரூபாய் விலை கொண்ட கடிகாரம் ஒன்று பதிக்கப்பட வேண்டும். ஏனென்றால் மனிதன் தனது நேரத்தை அறிந்து

கொள்ள வேண்டும். மேலும் நேரத்தை கண்டறிவதன் பக்கம் மனிதர்களுக்கு கவனம் ஏற்பட வேண்டும். (ஹமீமா குத்பா இல்ஹாமிய்யா பக்கம் 16, ரூஹானீ கஸாயின் தொகுதி 16)

**மினாரா கட்டுமான செலவிற்கான ஏற்பாடு**

1900 ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மினாரா கட்டுமானத்திற்கான திட்டத்தை தயார் செய்தார்கள். அப்போது ஜமாஅத் உறுப்பினர்களின் எண்ணிக்கையும், அவர்களின் பொருளாதார நிலையும் மினாரா கட்டுவதற்காக மிகவும் அதிகமாக சந்தா கொடுப்பதற்கு தகுதி படைத்ததாக இருக்கவில்லை.

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா பஷீருத்தீன் மஹ்மூத் சாஹிப் (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் – ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முபாரக் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தார்கள். மினாரா கட்டுவதற்கான திட்டம் முன் வைக்கப்பட்டது. மீர் ஹிஸாமுத்தீன் சாஹிப் சியால்கோட்டி அவர்கள் 10000 ரூபாய் செலவாகும் என்று கூறினார்கள். ஆனால் இந்த 10000 ரூபாய் எங்கிருந்து வரும் என்ற கேள்வி எழுந்தது. ஏனென்றால் அப்போது ஜமாஅத்தின் நிலைமை மிகவும் பலவீனமானதாக இருந்தது. அந்நிலைமைகளில் மினாரா கட்டுவது மிகக் கடினமான பணியாக இருந்தது. எனவே இதை விட குறைவான செலவு கொண்ட திட்டத்தை கூறும்படி ஹுஸூர் (அலை) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 10000 ரூபாயில் 100,100 ஆக பிரித்து பல்வேறு வகைகளில் பங்கிட்டு விட்டார்கள்.

எனவே ஜூலை 1, 1900 ஆம் ஆண்டு பிரசுரத்தில் மினாராவின் செலவீனங்களை ஏற்பாடு செய்வதற்காக ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் தனது 101 இளைஞர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டு குறைந்தபட்சம் ஒவ்வொருவரும் 100, 100 ரூபாய் சந்தா கொடுக்க வேண்டும் என கூறினார்கள். மேலும் இந்த திட்டத்திற்கு லெப்பைக் என்று கூறுபவர்களின் பெயர்கள் மினாராவில் நினைவாக பதியப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. இந்த அறிவிப்புடன் அன்னாரின் நான்கு கலப்பற்ற இளைஞர்களான, முன்ஷி அப்துல் அஸீஸ் சாஹிப் ஊஜல்வி, மர வியாபாரியான மியான் ஷாதி கான் சாஹிப் சியால்கோட், மவ்லவி முஹம்மத் அலி சாஹிப் M.A அவர்களும், ஷேக் நியாஸ் அஹ்மத் சாஹிப் (வியாபாரி) வஸீராபாத் அவர்களும் ஹுஸூர் அவர்களின் நிபந்தனைக்கேற்ப சந்தா கொடுத்து விட்டார்கள். அவர்களில் முதல் இரண்டு சஹாபிகளின் நற்குறிப்பை ஹுஸூர் (அலை) அவர்கள் அந்த பிரசுரத்தின் ஆரம்பத்திலேயே மிகவும் பாராட்டுதலுக்குரிய சொற்களுடன் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்விருவரின் தியாகத்தை ஜமாஅத் நபர்களுக்கு முன்மாதிரியானதாக ஆக்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் உம்முல் மூமினீன் (ரலி) அவர்கள் மினாராவிற்காக ஆயிரம் ரூபாயை சந்தாவாக எழுதி விட்டார்கள். அதனை அன்னார் டெல்லியிலிருந்த தனது ஒரு வீட்டை விற்று செலுத்தி விட்டார்கள். ஹிஜ்ரி 1320 ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் 13 ஆம் தேதி ஆங்கில ஆண்டிற்கேற்ப 1903 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் தேதி ஜுமுஆ நாளன்று மினாரத்துல் மஸீஹிற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த நாள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய கரங்களால் மினாரத்துல் மஸீஹிற்கான அடிக்கல் வைக்கப்படுவது சிறந்ததாக இருக்குமென்று ஹக்கீம் ஃபஸ்லே இலாஹி சாஹிப் லாஹூரி, மிர்ஸா குதா பக்ஷ் சாஹிப், ஷேக் மவ்லா பக்ஷ் சாஹிப், காஸி ஸியாத்தீன் சாஹிப் ஆகியோர் கூறினர்.

அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்று மினாரத்துல் மஸீஹிக்கு அடிக்கல் வைக்கப்பட இருக்கிறது என்பது கூட எனக்குத் தெரியாது. இப்போது நீங்கள் ஒரு செங்கலை கொண்டு வாருங்கள். நான் அதில் துஆ செய்வேன். பின்னர் நான் எங்கு கூறுவேனோ அங்கு நீங்கள் சென்று வைத்து விட வேண்டும் என்று கூறினார்கள். எனவே ஹக்கீம் ஃபஸ்லே இலாஹி சாஹிப் அவர்கள் ஒரு செங்கலை கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதனை தனது அருளுக்குரிய தொடையில் வைத்து நீண்ட நேரம் துஆ செய்தார்கள். துஆவிற்குப் பிறகு அன்னார் ஒரு செங்கலின் மீது ஊதினார்கள். பின்னர் இதனை நீங்கள் மினாரத்துல் மஸீஹ் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ள தெற்குப் பகுதியில் வைத்து விடுங்கள் என்று ஹக்கீம் ஃபஸ்லே இலாஹி சாஹிப் அவர்களிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

ஹக்கீம் சாஹிப் அவர்களும், ஏனைய சகோதரர்களும் இந்த அருளுக்குரிய செங்கலை எடுத்துக் கொண்டு அக்ஸா பள்ளிவாசலை அடைந்தபோது மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் ஜுமுஆ தொழுகையை நடத்தி விட்டு வழியில் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு சிறிது நேரம் மஸ்ஜிது அக்ஸாவில் அமர்ந்திருப்பது மவ்லவி சாஹிப் அவர்களின் வழக்கமாக இருந்தது. அறிவு மற்றும் ஞானத்தின் ஒரு பெரும் சபை கூட்டப்பட்டு வந்தது. அதில் வெளியூரிலிருந்து வரக்கூடிய சகோதரர்கள் அன்னாரை சுற்றி ஒன்றுகூடி விடுவார்கள். மேலும் அன்னாரிடமிருந்து பயன் பெற்று வந்தார்கள். அந்த நாளன்றும் தனது வழக்கத்திற்கேற்ப தாமதமாக திரும்பிக் கொண்டிருந்தார்கள். வழிப்பாதையில் இந்த நிலையை அன்னார் அறிந்தபோது அன்னார் மிகவும் உருக்கமாக ஆகி விட்டார்கள். அந்த செங்கலை வாங்கி தனது நெஞ்சில் அனைத்துக் கொண்டார்கள். மேலும் ஒரு நீண்ட நேரம் வரை துஆ செய்து கொண்டிருந்தார்கள். மேலும் இந்தப் பணியில் வானவர்கள் சாட்சியமாக இருக்கட்டும். இது எனது ஆசையாகும் என்று கூறினார்கள். இறுதியில் ஃபஸ்லுத்தீன் சாஹிப் அஹ்மதி (பெரியாளர்) அவர்கள் அந்த செங்கலை அடித்தளம் அமைக்கப்பட இருந்த தெற்குப் பகுதியில் வைத்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்கள் அந்த வேலையின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்கள். மினாராவின் அடித்தளம் மிகவும் ஆழத்திலும், கான்கிரிட் மூலமாக உறுதியுடனும் எழுப்பப்பட்டது.

**மினாரா கட்டுமானத்தை தடுத்து நிறுத்துவதற்காக அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அரசாங்க அதிகாரிகளை அணுகினர்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாத்திற்கு ஆற்றி வந்த தொண்டின் காரணமாக ஆரம்பம் முதலே ஆரிய சமாஜைச் சார்ந்த நபர்களின் ஒரு பிரிவு காதியானில் எதிர்த்து வந்தனர். சில முறை அமிர்தசரஸிலிருந்து பண்டித் கடக் சிங்கை காதியான் அழைத்து வந்தனர். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் முனாஸிரா செய்வதற்கு அழைத்தனர். சில முறை இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை பொய்ப்படுத்துவதற்காக ஷுப் சந்திக் என்ற பத்திரிகையை நடத்தினர். வேறு சில சந்தர்ப்பத்தில் தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தை தோற்கடிப்பதற்காக தியானந்த் பள்ளிக்கூடத்தை திறந்தனர். மேலும் சில முறை அக்ஸா பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த தொழுகையாளிகளை ஏசிப் பேசினர். மினாரத்துல் மஸீஹிற்கான அடித்தளம் அமைக்கப்பட்டபோது இதே பிரிவினர்

தான் கடுமையாக எதிர்க்கத் தொடங்கினர். அதன் கட்டுமானத்தை தடுத்து நிறுத்துவதற்கு தடை உத்தரவை பெறுவதற்காக அரசாங்க அதிகாரிகளிடம் சென்றடைந்தனர். மாவட்ட அரசாங்கமும் அதனை விசாரிப்பதற்காக, 8 மே 1903 அன்று பட்டாலாவின் தாசில்தாரை அனுப்பி வைத்தது. அந்தக் குழு காதியான் வந்தடைந்தபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நடைபயிற்சிக்காக வெளியே சென்றிருந்தார்கள். சுமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் திரும்பி வந்தார்கள். கீழ்க்கண்ட விசாரணை நிகழ்ந்தது.

தாசில்தார்: மினாரா ஏன் கட்டப்படுகிறது?

ஹுஸூர் (அலை): (1) இந்த மினாரா கட்டுவதன் ஒரு பரக்கத் என்னவென்றால் அதன் மீது ஏறி நின்று இறைவனின் பெயர் கூறப்படும். எங்கு இறைவனின் பெயர் கூறப்படுமோ அந்த இடம் அருளுக்குரியதாக இருக்கும். (2) இதன் மீது ஓர் ஒளி விளக்கு பொருத்தப்படும். அதன் ஒளி தொலைவிலிருந்தும் தென்படும். (3) ஒரு கடிகாரம் பொருத்தப்படும். (4) இதனால் திரையின்மை ஏற்படும் என்ற எண்ணம் தவறாகும்.

இப்போது நமக்கு முன்னால் ''டெப்டி சங்கர்தாஸ் சாஹிப்'' அவர்களின் வீடு உள்ளது. அது எந்த அளவுக்கு உயரமானதாக உள்ளது என்றால் அதில் மனிதன் ஏறி நிற்கும்போது எமது வீட்டிலுள்ளவற்றை பார்க்க முடிகின்றது. அதனால் அவரது வீட்டை இடித்து விட வேண்டும் என்று நாங்கள் கூறலாமா? எங்களது வீட்டை நாங்கள் சுயம் திரையிட்டுக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் ஹாபிஸ் ரோஷன் அலி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்கு ஏற்பாடு ஆனபோது சில காதியான்வாசிகள் அரசாங்க அதிகாரிகளிடம் சென்று இந்த மினாராவை கட்டுவதால் எங்களது வீடுகளின் திரை அகன்று விடும் என்று புகார் செய்தனர். எனவே அரசாங்கத்தின் சார்பாக ஓர் அதிகாரி காதியான் வந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை முபாரக் பள்ளிவாசலுடன் அமைந்துள்ள அறையில் (பைத்துல் ஃபிக்ரில்) சந்தித்தார். அப்போது காதியானைச் சேர்ந்த புகார் அளித்திருந்த சில மக்களும் அவருடன் வந்திருந்தனர். ஹஸ்ரத் சாஹிப் அவருடன் அதிகாரி பேசிக் கொண்டிருந்தார்.

இந்த உரையாடலில் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் அதிகாரியை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: இதோ முதியவர் புட்டாமல் அமர்ந்திருக்கின்றார். தாங்கள் அவரிடம் கேளுங்கள். சிறுவர் பருவம் முதல் இன்று வரை அவருக்கு நன்மை பயப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் எனக்கு கிடைத்து அவருக்கு நன்மை பயப்பதில் நான் ஏதும் குறை வைத்தேனா? மேலும் அதேபோன்று எனக்கு தீங்கு இழைப்பதற்கு அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்து எனக்கு தீங்கிழைப்பதில் அவர் குறை ஏதும் வைத்துள்ளாரா? என்றும் அவரிடம் கேளுங்கள்.

ஹாஃபிழ் சாஹிப் கூறுகின்றார்கள்: நான் அப்போது புட்டாமல் என்ற அந்த நபரை பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் வெட்கத்தால் தலை குனிந்து நின்று கொண்டிருந்தார். மேலும் அந்த நபரின் முகமே முற்றிலும் மாறி விட்டது என்றும் அவரால் ஒரு வார்த்தை கூட வாயால் கூற முடியவில்லை என்றும் ஹாபிஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 138 அறிவிப்பு எண் 148)

இறுதியில் இந்த வழக்கு குர்தாஸ்பூர் நீதிமன்றத்தில் டெப்டி கமிஷ்னர் பஹாதுர் அவர்களிடம் சென்றது. அங்கு வழங்கப்பட்ட தீர்ப்பு கீழே தரப்பட்டுள்ளது:

நகல் ஹகம் இஜ்லாஸ்: சி.எம்.டாலிஸ் சாஹிப் பஹாதுர், துணை கமிஷ்னர், பஹாதுர், குர்தாஸ்பூர் மாவட்டம்.

தீர்ப்பு: 13 மே 1903 ஆம் ஆண்டு, வழக்கு எண் 4–17

மினாரத்துல் மஸீஹ் காதியான் கட்டுவதற்கான ஆவணங்களும், அதற்கு எதிராக கூறப்பட்ட சில நபரின் ஆவணங்களும் பார்வையிடப்பட்டது. தற்போது வரை அமைதிக்கு குந்தகம் விளைவிக்கின்ற எந்த விஷயமும் அதில் இல்லை. ஆவணங்கள் அலுவலகத்தில் பதியப்பட வேண்டும்.

(ஆதாரம்: அல் ஹகம் 10 ஜூன் 1903 பக்கம் 4–10)

இந்த தீர்ப்புடன் அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் சதித்திட்டம் தோல்வியுற்றது. அல்ஹம்துலில்லாஹ்.

### பொருளாதார கஷ்டத்தின் காரணமாக மினாரா கட்டுமானத்தில் தாமதம்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைஞானத்தின் அடிப்படையில் மினாரத்துல் மஸீஹின் கட்டுமானப் பணியை தொடங்கினார்கள். ஆனால் சில கஷ்டங்களின் காரணமாக கட்டுமானத்தை நிறுத்த வேண்டியது ஏற்பட்டது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மினாரா பணி (ஃபண்ட் குறைவின் காரணமாக) நிறுத்தப்பட்டிருந்தது. ஹுஸூர்! இந்த மினாரா எப்போது தயாராகும்? என்று ஒரு நாள் ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு அனைத்து வேலைகளையும் நாமே முடித்து விட்டால் பின்னால் வரக்கூடியவர்களுக்கு எங்கிருந்து நற்கூலி கிடைக்கும்? என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள். எனவே ஹுஸூர் (அலை) அவர்களின் வாழ்க்கையில் மினாரா கட்டுமானம் பள்ளிவாசலின் வளாகத்தின் உயரத்திலிருந்து 6 அடியை விட உயரமாக எழுப்ப முடியாமல் போனது.

### மினாரத்துல் மஸீஹின் முழுமை

அல்லாஹ் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை 1914 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் தேதி கிலாஃபத் அரியணையில் அமர்த்தினான். இந்த கம்பீரமிக்க பொறுப்பின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக சில மாதங்களுக்குப் பிறகு அதாவது 27 நவம்பர் 1914 அன்று மினாராவின் முழுமையடையாத கட்டடத்தில் தனது அருளுக்குரிய கைகளால் செங்கலை வைத்து அதன் கட்டுமானப் பணியை மீண்டும் அன்னார் துவக்கி வைத்தார்கள். இந்த முறை அந்த கட்டுமானத்தின் மேற்பார்வை பொறுப்பை காஸி அப்துர் ரஹீம் சாஹிப் பட்டி அவர்களிடம் அன்னார் ஒப்படைத்திருந்தார்கள்.

அஜ்மீரிலிருந்து அதற்காக சிறந்த பளிங்கு கற்கள் கொண்டு வரப்பட்டன. மேலும் இறுதியில் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நபித்துவ சான்றின் ஒரு பெரிய அடையாளம் டிசம்பர் மாதம் 1915 ஆம் ஆண்டு முழுமையடைந்து விட்டது. இந்த அழகிய, மனதை கவரக்கூடிய, அற்புதமான இந்த மினாரா 105 அடி உயரம் கொண்டதாகும். அதற்கு மூன்று அடுக்கு மாடியும் ஒரு கும்பதும், 92 படிகளும் உள்ளன. (கட்டுமான கலையில் ஓர் உயர்ந்த முன்னுதாரணமாகும்). .

### அல்லாஹ்வின் புறமிருந்து மினாரத்துல் மஸீஹிற்கான பாதுகாப்பு

கடந்த 100 ஆண்டுகளில் ஏராளமான நில நடுக்கங்களும், புயல்களும் வந்துள்ளன. இந்த ஆபத்துகளின்போதும் அல்லாஹ் மினாரத்துல் மஸீஹை பாதுகாத்துள்ளான். 8 அக்டோபர் 2005 அன்று காலை 9.15 மணி அளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. மஸ்ஜித் அக்ஸாவின் கிழக்குப் புறம் அமைந்திருந்த சதர் அஞ்ஜுமன் அஹ்மதிய்யாவின் அலுவலகத்தின் பழைய கட்டுமானப் பகுதியில் நான் இருந்தேன். அந்த கட்டடத்தின் வடக்குப் பகுதியில் மினாரத்துல் மஸீஹிற்கு முற்றிலும் அருகில் நான் நின்று கொண்டிருந்தேன். மினாரத்துல் மஸீஹை சுற்றி அமைந்துள்ள

அனைத்து கட்டடங்களும் அசைந்து கொண்டிருந்தன. ஆனால் மினாரத்துல் மஸீஹில் சிறிதளவு அசைவை கூட காண முடியவில்லை. நிலநடுக்கத்தால் இந்த இறை அடையாளத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் இருக்க இறைவனின் கரம் அதை தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்ததுபோன்று தோன்றியது.

மினாராவின் பரக்கத்தால் அல்லாஹ் எங்களை ஆபத்திலிருந்து பாதுகாத்திருக்கின்றான் என்று காதியானில் வசிக்கக்கூடிய நல்லியல்பு படைத்த ஹிந்து மற்றும் சீக்கிய நண்பர்கள் இந்த உண்மையை வெளிப்படையாக ஒப்புக் கொண்டனர். அவ்வாறு ஒப்புக் கொண்டவர்களில் ஹக்கீம் சூரன் சிங், கியானி லாப் சிங் போன்ற பிரபலமானவர்கள் அடங்குவர். தற்போது அவர்கள் மரணமடைந்து விட்டனர்.

**நன்றி கூறுதல்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: எவர்கள் குறைந்தபட்சம் 100 ரூபாய் மினாரா சந்தாவாக கொடுத்துள்ளார்களோ அத்தகைய அனைத்து மக்களின் பெயர்களும் எழுதப்படும். இந்த பெயர்கள் ஒரு நீண்ட காலம் வரை மினாராவில் பொறிக்கப்பட்டிருக்கும். அது வரக்கூடிய சந்ததிகள் துஆ செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கிக் கொண்டிருக்கும். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 319, 1 ஜூலை 1900)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கேற்ப சந்தா கொடுத்த 306 நபர்களின் பெயர்கள் மினாரத்துல் மஸீஹில் பொறிக்கப்பட்டுள்ளது. காலத்தில் மாற்றங்களால் அதில் பதியப்பட்ட பெயர்கள் சிறிது மங்கி விட்டன. இது பற்றி ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டபோது ஹுஸூர் (அய்ய...) அவர்கள், மழுங்கியிருந்த அந்த பெயர்களின் எழுத்துக்களை ஒளியூட்டுவதற்கு ஒப்புதல் நல்கினார்கள்.

ஹுஸூர் அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப அந்த பணியை ஜனவரி மாதம் 2020 ஆம் ஆண்டு கட்டுமானத் துறை காதியான் மூலமாக முழுமை செய்தது. அல்லாஹ் அவர்களுக்கு அழகிய நற்கூலியை வழங்குவானாக. தற்போது இந்த பெயர்களை தொலைவிலிருந்து கூட படிக்க முடியும். மேலும் அதை வாசிக்கக் கூடியவர்கள் சந்தா கொடுத்தவர்களுக்காக துஆவும் செய்கின்றனர். அல்ஹம்துலில்லாஹ். தற்போது மினாரத்துல் மஸீஹ் காதியானில் பதியப்பட்டுள்ள சந்தா கொடுத்த நற்பாக்கியம் கொண்ட அந்த அருளுக்குரிய 306 நபர்களின் பெயர்கள் கீழே தரப்படுகிறது.

(1) வாக்களிக்கப்பட்ட மற்றும் உறுதிமொழி அளிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை)
(2) ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் மவ்லவி நூருத்தீன் (ரலி)
(3) ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி)
(4) ஹஸ்ரத் உம்முல் மூமினீன் நுஸ்ரத் ஜஹான் பேகம் (ரலி)
(5) ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் M.A
(6) ஹஸ்ரத் நவாப் முஹம்மத் அலி கான் (தலைவர், மலேர்கோட்லா)
(7) டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சிவில் சர்ஜன் காதியான்
(8) ஹாபிஸ் ரோஷன் அலி சாஹிப் (ரலி) காதியான்
(9) மவ்லவி துல்ஃபிகார் அலி கான், கோஹர் ராம்பூரி மஹாராஜ் – காதியான்
(10) முஹம்மத் ஹயாத் கான், பென்ஷனர் ஹாபிஸாபாத்
(11) மவ்லவி குலாம் அக்பர் கான் நவாப் அக்பர் யார்ஜங், ஹைதராபாத் தெற்கு
(12) பாபு முஹம்மத் அஃப்ஸல் (சூப்பிரண்டன்டன்ட் வஸரிஸ்தான் குடியிருப்பு அலுவலகம்)
(13) கான் பஹாதுர் முஹம்மத் அலி கான் (நேகஷ் பொலிடிக்கல் அதிகாரி கோஹாட்)
(14) கான் சாஹிப் சவுத்ரி நிஃமத்துல்லாஹ் கான் (சப் ஜஜ் பேகம்பூர்)
(15) ரஷீதா பேகம் சாஹிபா (சவுத்ரி ஜபருல்லாஹ் கான் பேரஸ்டர் லாஹூர் அவர்களின் மனைவி)
(16) அஹ்வந்த் முஹம்மத் அஃப்ஸல் கான், அஃப்கான் கல்ஸி டேரா காஸிகான்
(17) தவ்லத் காத்தூன் – அஃப்ஸல் கான் அஃப்கான் கல்ஸி டேரா காஸிகான் அவர்களின் மனைவி
(18) அல்தாஃப் முஹம்மத் கான் – அஹ்வந்த் முஹம்மத் அஃப்ஸல் கான் அஃப்கான் கல்ஸி டேரா காஸிகான் அவர்களின் மகன்
(19) குரைஷி முக்தார் அஹ்மத் – சூப்பிரண்டன்ட் முனிஸிப்பல் எஜிகேஷன் டெல்லி
(20) மர்யம் சித்தீக்கா (பாபு முஹம்மத் ஷஃபீ நவ் ஷஹ்ரா, சியால்கோட் மாவட்டம் அவர்களின் துணைவியார்)
(21) காஸி செய்யது அமீர் ஹுஸைன் காதியான்
(22) மவ்லவி முஹம்மது சயீத் ஹைதராபாத் தெற்கு
(23) முன்ஷி ஷாதி கான் காதியான்
(24) மவ்லவி முஹம்மது அலி M.A.,LLB
(25) ஷேக் நியாஸ் அஹ்மத் தாஜிர் வஸீராபாத்
(26) முன்ஷி அப்துல் அஸீஸ் பட்வாரி காதியான்
(27) ஹாஜி சேட் அப்துர் ரஹ்மான் (வணிகர், மத்ராஸ்)
(28) சேட் அலி முஹம்மத் (வணிகர், பெங்களூர்)
(29) ஹாஜி சேட் சாலிஹ் முஹம்மது (வணிகர், மத்ராஸ்)
(30) சேட் அஹ்மத் (வணிகர், மத்ராஸ்)
(31) சேட் வால்ஜி லால்ஜி (வணிகர், மத்ராஸ்)
(32) மவ்லவி ஸஹூர் அலி (வக்கீல், ஹைதராபாத் தெற்கு)
(33) மீர் ஹாமித் ஷா சியால்கோட்
(34) நவாப் செய்யத் முஹம்மத் ரிஜ்வி பம்பாயி
(35) முஃப்தி முஹம்மத் சாதிக் காதியான்
(36) மேஸ்த்ரி அஹ்மது தீன் பேரா
(37) டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் காதியான்
(38) கலீஃபா நூருத்தீன் ஜமு
(39) ஹாபிஸ் முஹம்மத் இஸ்ஹாக், ஹைதராபாத்.
(40) செய்யத் நாஸிர் ஷா காதியான்
(41) செய்யத் ஃபஸல் ஷா காதியான்
(42) செய்யத் குலாம் கவ்ஸ் காதியான்
(43) டாக்டர் ரஹ்மத் அலி ஆஃப்ரிக்கா
(44) பாபு முஹம்மத் அப்ஸல் (எடிட்டர், பதர் பத்திரிகை)
(45) டாக்டர் முஹம்மத் இஸ்மாயீல் கான் கட்யானீ
(46) பீர் பரக்கத் அலி ரன்மல்
(47) ஷேக் குலாம் நபி சேட்டி காதியான்
(48) மவ்லவி ஷேர் அலி B.A காதியான்
(49) மவ்லவி அப்துல்லாஹ் சனோரி
(50) மியான் ரஹ்மத்துல்லாஹ் சனோரி
(51) மியான் அப்துர் ரஹீம் சனேரி
(52) மியான் ஹபீபுல்லாஹ் சனோரி
(53) சூஃபி அப்துல் கதீர் B.A சனோரி
(54) மாஸ்டர் காதிர் பக்ஷ் லூதியானா
(55) மவ்லவி அப்துர் ரஹீம் தர்த் M.A காதியான்
(56) பாபு குலாப் கான் (பென்ஷனர், சியால்கோட்)
(57) மியான் முஹம்மத் தீன் சியால்கோட்
(58) மாஸ்டர் கமருத்தீன் லூதியானா
(59) மவ்லவி அப்துல் காதிர் மன்ஸூர்வா, லூதியானா மாவட்டம்
(60) முன்ஷி முஹம்மத் அக்பர் பட்டாலா

(61) ஹக்கீம் முஹம்மத் ஹுஸைன் குரைஷி லாஹூர்
(62) முன்ஷி முஹம்மத் ஜான் ஊஜலா
(63) சவுத்ரி ஹாகிம் அலி காதியான்
(64) மியான் முஹம்மத் சித்தீக் சீக்வான்
(65) மியான் இமாமுத்தீன் சீக்வான்
(66) மியான் ஜமாலுத்தீன் சீக்வான்
(67) மவ்லவி குலாம் இமாம் ஷாஜஹான்பூரி
(68) மியான் கைருத்தீன் சீக்வான்
(69) சூஃபி நபி பக்ஷ் (கிளர்க், மும்பாஸா)
(70) சேக் அப்துர் ரஹ்மான் (கிளர்க், மும்பாஸா)
(71) சேக் முஹம்மத் கரம் இலாஹி வக்கீல் பட்டியாலா
(72) பாபு ரோஷன் தீன் (பென்ஷனர், சியால்கோட்)
(73) பாபு ஷாஹ்தீன் (ஸ்டேஷன் மாஸ்டர் டுமேலி)
(74) ஹாஜி முல்லான் இமாம் பக்ஷ்
(75) சேட் மூஸா பின் உஸ்மான் ஜாம்நகர்
(76) டாக்டர் ராமானந்த் (கட்வால் மாவட்டம்)
(77) சேக் யஃகூப் அலி (அல் ஹகம் பத்திரிகையின் ஆசிரியர், காதியான்)
(78) ஷேக் யஃகூப் அலி அவர்களின் மனைவி
(79) ஷேக் யஃகூப் அலி அவர்களின் மகள் மஹ்மூதா
(80) ஷேக் யஃகூப் அலி அவர்களின் சகோதரர் ஷேக் குலாம் கவ்ஸ்
(81) ஹாஜி குலாம் அஹ்மது கர்யாம்
(82) முன்ஷி ஹபீபுர் ரஹ்மான் ஹாஜிவூரா
(83) காஸி மீர் ஹஸன் அலி பூர் முல்தான்
(84) மவ்லவி உமருத்தீன் சரீஹ்
(85) மவ்லவி உமருத்தீன் சரீஹ் அவர்களின் மனைவி
(86) பாபு ஜமாலுத்தீன் குஜ்ரான்வாலா
(87) மவ்லவி அஹ்மது ஷேர் கான் ஹைதராபாத் தெற்கு
(88) சேட் ஷேக் ஹஸன் யாத்கீர்
(89) முன்ஷி நாதிர் கான் சர்காலி, ஜஹலம் மாவட்டம்
(90) நாதிர் கான் சர்காலி, ஜஹலம் மாவட்டம்
(91) மிர்ஸா முஹம்மத் சாதிக் லாஹூர்
(92) ஹக்கீம் ஃபஸல் தீன் பேர்வி காதியான்
(93) முன்ஷி ருஸ்தம் அலி கோர்ட் இன்ஸ்பெக்டர்
(94) மியான் நபி பக்ஷ் (வணிகர், பஷ்மீனா அமிர்தசரஸ்)
(95) மியான் சிராக் தீன் லாஹூர்
(96) மவ்லவி குலாம் ஹுஸைன் பெஷாவர்
(97) சேக் ரஹ்மத்துல்லாஹ் (வணிகர், லாஹூர்)
(98) சேக் அப்துர் ரஹ்மான் (பென்ஷனர் EAC லாஹூர்)
(99) மாஸ்டர் குலாம் முஹம்மத் B.A சியால்கோட்
(100) சேக் பஸல் ஹக் பட்டாலா
(101) சேக் மவ்லா பக்ஷ் பூட் மென்சண்ட் சியால்கோட்
(102) முன்ஷி அல்லாஹ் தத்தா (மேனேஜர் சியால்கோட்)
(103) சேக் குலாம் ஹைதர் (டெப்டி இன்ஸ்பெக்டர் போலீஸ் சியால்கோட்)
(104) மவ்லவி அஸீஸ் பக்ஷ் B.A
(105) மாஸ்டர் முஹம்மது இஸ்மாயீல் (டெய்லர் மாஸ்டர் சியால்கோட்)
(106) சேக் முஹம்மத் ஜான் (வணிகர், வஸீராபாத்)
(107) ஹக்கீம் மிர்ஸா ஹுதா பக்ஷ் லாஹூர்
(108) முன்ஷி மஹர் தீன் பட்வாரி (ஷுக்ர்கட் தாலுகா)
(109) முன்ஷி முஹம்மத் காஸீம் லாலா மூஸா
(110) ஹாஜி முஃப்தி குல்ஸார் முஹம்மத் பட்டாலா
(111) மிர்ஸா ஹுஸைன் பேக் (கர்கா குஜ்ராத் மாவட்டம்)
(112) சூஃபி முஹம்மத் யாகூப் ஆஃப்கானா
(113) பாபு பக்ருத்தீன் கிளர்க்
(114) பாபு அதாவுல்லாஹ் கான் தரம்கோட்
(115) பாபு நிஸாமுத்தீன் மாஹில்பூர்
(116) மாஸ்டர் அப்துல் அஸீஸ் டெய்லர் மாஸ்டர் சியால்கோட்
(117) பாபு முஹம்மத் வஸீர் கான் சப்அவர்சேர் காதியான்
(118) மவ்லவி குத்ரத்துல்லாஹ் சாஹிப் சனோரி
(119) மியான் அல்லாஹ் தீன் ராவல்பிண்டி மாவட்டம்
(120) ராஜா அலி முஹம்மத் AC சஹூநபி ஜஹ்லம் மாவட்டம்
(121) கான் பஹாதுர் சேக் முஹம்மது ஹுஸைன் (பென்ஷனர் ஜஜ் அடிகட்)
(122) டாக்டர் செய்யது வலாயத் ஷா ஆஃப்ரிக்கா காதியான்
(123) முன்ஷி கோஹர் அலி கோட்லா அஃப்கானா
(124) ஷேக் முஷ்தாக் ஹுஸைன் குஜ்ரான்வாலா
(125) கான் சாஹிப் முன்ஷி பர்ஸன்த் அலி காதியான்
(126) கதீஜா பேகம் (முன்ஷி பர்ஸன்த் அலி காதியான் அவர்களின் மனைவி)
(127) அம்மத்துல்லாஹ் பேகம் (முன்ஷி பர்ஸன்த் அலி காதியான் அவர்களின் மனைவி)
(128) டாக்டர் செய்யது அப்துஸ் சத்தார் சாஹிப் காதியான்
(129) செய்யதா சயீதத்துன் நிஸா (டாக்டர் செய்யத் அப்துஸ் சத்தார் சாஹிப் காதியான் அவர்களின் மனைவி)
(130) டாக்டர் அஸ்மத்துல்லாஹ் காதியான்
(131) கான் சாஹிப் முன்ஷி பரக்கத் அலி ஷிம்லா
(132) மவ்லவி அப்துர் ரஹீம் நய்யர் காதியான்
(133) அஹ்மதிய்யா ஜமாஅத் லேகோஸ் காதியான்
(134) மவ்லவி ஆலம்கீர் கான் கம்பட்சிந்த்
(135) மேஸ்தரி அலி பக்ஷ் ஃபரீத்கோட்
(136) மேஸ்தரி அலி பக்ஷ் ஃபரீத்கோட் அவர்களின் மனைவி
(137) டாக்டர் ஜம்அதார் அப்துல் கரீம் குஜ்ரான்வால், லூதியானா மாவட்டம்
(138) ஷேக் அலி அஸ்ஃபர்
(139) முன்ஷி முஹம்மத் தீன் கார்யான்
(140) மியான் குலாம் நபி மாஹில்பூர்
(141) ஷேக் ஃபஸல் அஹ்மத் பட்டாலா
(142) ஷேக் ஃபஸல் அஹ்மத் பட்டாலா அவர்களின் மனைவி
(143) டாக்டர் செய்யத் முஹம்மத் ஹுஸைன் ஷா தரம்கோட், ரந்தாவா
(144) டாக்டர் செய்யது முஹம்மத் ஹுஸைன் ஷா தரம்கோட், ரந்தாவா அவர்களின் பிள்ளைகள்
(145) டாக்டர் ஃபஸல் தீன் வெட்னரி அஸிஸ்டன்ட் காதியான்
(146) டாக்டர் ஃபஸல் தீன் வெட்னரி அஸிஸ்டன்ட் காதியான் அவர்களின் மனைவி
(147) டாக்டர் ஃபஸல் தீன் வெட்னரி அஸிஸ்டன்ட் காதியான் அவர்களின் பிள்ளைகளை
(148) ஷேக் அஹ்மத் அல்லாஹ் நவ்ஷஹ்ரா சாவ்னீ
(149) காஸி அப்துல்லாஹ் B.A காதியான்
(150) சூஃபி முஹம்மத் அலி ஜன்ஜூஆ ஜலால்பூர் ஜடான்
(151) பாபு முஹம்மத் அப்துல்லாஹ் கிளர்க், ஃபிரோஸ்பூர்
(152) டாக்டர் ஃபஸல் கரீம் காதியான்
(153) சேட் அப்துல்லாஹ் பாயி சிகந்தராபாத்
(154) சேட் அப்துல்லாஹ் பாயி சிகந்தராபாத் அவர்களின் மனைவி
(155) சேட் ஆலாதீன் சிகந்தராபாத்
(156) பாபு முஹம்மத் ஷரீஃப் சப்அவ்ர்ஸீர் காதியான்
(157) மாஸ்டர் முஹம்மத் தீன் BA Head Master காதியான்
(158) மாஸ்டர் முஹம்மத் தீன் BA Head Master காதியான் அவர்களின் பிள்ளைகள்

(159) ஹாஃபிழ் செய்யது அப்துல் வஹீத் தாஜிர் மன்ஸூரி
(160) ஹாஃபிழ் செய்யது அப்துல் மஜீத் தாஜிர் மன்ஸூரி
(161) பாபு ஈஜாஸ் ஹுஸைன் தில்லி
(162) ஷேக் அப்துர் ரஹ்மான் காதியானி
(163) சூபேதார் குலாம் ஹுஸைன் சக் 181 பாக்படன்
(164) மாஸ்டர் முஹம்மத் துஃபைல் காதியான்
(165) டாக்டர் ஷா நவாஸ் சியால்கோட்
(166) பீர் மன்ஸூர் முஹம்மத் காதியான்
(167) முன்ஷி குல் முஹம்மத் மஸல்ஹவான் தலகின்ங் கேம்பல்பூர் மாவட்டம்
(168) ஷேக் நியாஸ் முஹம்மத் சப் இன்ஸ்பெக்டர் போலீஸ் குஜ்ரான்வாலா
(169) சேஷ் குலாம் ஹுஸைன் லூதியானவி புதுதில்லி
(170) சேட் அலி முஹம்மத் ஆஹ சிகந்தராபாத்
(171) பாத்திமா பேகம் பின்த் சேட் அப்துல்லாஹ் பாயி சிந்தராபாத்
(172) பாபு ஃபஸல் தீன்
(173) சேட் இஸ்மாயீல் ஆதம் பம்பாயி
(174) டாக்டர் குலாம் முஸ்தஃபா கார்யான்
(175) செய்யத் குலாம் ஹுஸைன் டெப்டி சூப்பிரண்டென்ட் வெட்னரி டிபார்ட்மெண்ட்
(176) செய்யதா ஜமீலா காத்தூன் பின்த் செய்யத் அஹ்மத் ஹஸன் முஸஃப்பர் நகர்
(177) மாஸ்டர் முஹம்மத் இப்ராஹீம் செகரட்டரி நன்கானா சாஹிப்
(178) மியான் முஹம்மத் ஷரீஃப் நுஹஊ லாஹூர்
(179) அம்மத்துர் ரஹ்மான்
(180) கான் பஹாதுர் சவுத்ரி முஹம்மத் தீன் ரிடாய்ர்டு டெப்டி கமிஷ்னர்
(181) மலிக் மவ்லா பக்ஷ் அமிர்தசர்
(182) பாபு சிராஜுத்தீன் ஸ்டேஷன் மாஸ்டர்
(183) குரைஷி முஹம்மத் உஸ்மான் இன்ஜினியர் கர்னால்
(184) மிர்ஸா பரக்கத் அலி ஆபாதான்
(185) அம்மத்துர் ரஹ்மான் கானிம் – மிர்ஸா பரக்கத் அலி அவர்களின் மனைவி
(186) இப்ராஹீம் யூசுஃப் பர்தூலி
(187) பாபு அப்துர் ரஹ்மான் அன்பாலா
(188) ஹாஜி ஷேக் மீரான் பக்ஷ் அன்பாலா
(189) மியான் ஹுதா பக்ஷ் ஹான்டு
(190) சவுத்ரி சாதிக் அலி
(191) ஹக்கீம் ஃபஸ்லுர் ரஹ்மான் முபல்லிக் ஆஃப்ரிக்கா
(192) டாக்டர் மலிக் முஹம்மத் ரம்ஸான் ஸீகோபிந்த்பூர்
(193) சவுத்ரி முஹம்மத் இஸ்மாயீல் நுஹஊ கேவா பாஜ்பா சியால்கோட் மாவட்டம்
(194) ஐ.மலிக் முஸஃப்பர்பூர்
(195) பாபு அலி ஹஸன் சனோரி
(196) ஃபஹ்மீதா போகம் பின்த் மதத் அலி ஷா ஷாஜஹான்பூர்
(197) சவுத்ரி முபாரக் அஹ்மத் கோஹட் அவர்களின் மனைவி
(198) சவுத்ரி ஃபதஹ் முஹம்மத் சியால் MA காதியான்
(199) டாக்டர் பத்ருத்தீன் அஹ்மத் ஆஃப்ரிக்கா
(200) மவ்லவி அப்துல் கஃப்பார் மவ்லவி ஃபாஸில் காதியான்
(201) ஃபாத்திமத்துஸ் ஸுக்ரா – மவ்லவி அப்துல் கஃப்பார் மவ்லவி ஃபாஸில் காதியான் அவர்களின் மனைவி
(202) சர்தார் முஹம்மத் அலி ஜேடா கர்னானா
(203) பிரபஸர் மவ்லவி அப்துல் லத்தீஃப் சடாகான்ங்
(204) செய்யத் முஹம்மத் லத்தீஃப் சக் காஸியான் குர்தாஸ்பூர் மாவட்டம்
(205) ரஸூல் பிபி தலூண்டி மூஸா
(206) செய்யத் அப்துல் ஹலீம் கட்கி
(207) பாபு வஸீர் முஹம்மத் லாஹூர்
(208) மவ்லவி ஃபஸ்லுத்தீன் வக்கீல் காதியான்
(209) சவுத்ரி நூர் அஹ்மத் கான் முஹர்ரர் காதியான்
(210) ஷேக் அப்துர் ஹமீத் ஷிம்லா
(211) ஜைனப் பிபி – பாயி மஹ்மூத் அஹ்மத் காதியான் அவர்களின் மனைவி
(212) மவ்லவி அப்துல் முக்னி ஹான் காதியான்
(213) குலாம் முஹம்மத் வலத் மியான் முராத் பக்ஷ் ராஜ்பூத் செய்யத்வாலா ஷேக்குபூரா மாவட்டம்
(214) சுபேதார் முஹம்மத் அப்துல்லாஹ் இண்டியன் ஆர்மி காதியான்
(215) செய்யத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷா
(216) மியான் முஹம்மத் இஸ்மாயீல் சக் நம்பர் 537 மியான்வாலி ஷேக்குபூரா மாவட்டம்
(217) சவுத்ரி சுல்தான் அலி மன்ங்வால் குஜராத் மாவட்டம்
(218) மவ்லவி அப்துல் கரீம் தஹால் குஜ்ராத் மாவட்டம்
(219) ஹாபிழ் செய்யத் அப்துல் ஹமீத் மன்ஸூரி
(220) முஹம்மத் மதத் அலி இன்ஸ்பெக்டர் ஆஃப் வர்க்ஸ் ரயில்வே கான்பூர், பஹாவல்பூர் மாநிலம்
(221) மல்லவி முஹம்மத் அலி பதூ மஹல்வி காதியான்
(222) சவுத்ரி அப்துல் வாஹித் நைரோபி
(223) மாஸ்டர் அப்துல் அஸீஸ் பென்ஷனர் நவ் ஷஹர் பிஸர்வர் தாலுகா, சியால்கோட் மாவட்டம்
(224) பாத்திமா பீபீ – மாஸ்டர் அப்துல் அஸீஸ் பென்ஷனர் நவ் ஷஹர் பிஸர்வர் தாலுகா, சியால்கோட் மாவட்டம் அவர்களின் மனைவி
(225) அக்தர் பேகம் அர்ஃப் ஃபர்ஹந்தா – மாஸ்டர் அப்துல் அஸீஸ் பென்ஷனர் நவ் ஷஹர் பிஸர்வர் தாலுகா, சியால்கோட் மாவட்டம் அவர்களின் சகோதரி
(226) ஷேக் அப்துர் ரஷீர் சதர் பஜார் மீரட்
(227) டாக்டர் ஷேர் முஹம்மத் ஹாலி சியால்கோட்
(228) சேஷ் அப்துல் கனி கட்ஸ் கிளர்க் பிஷாவர்
(229) டாக்டர் குலாம் அலி சப் அஸிஸ்டண்ட் சர்ஜன்சஹவர் 117 ஷேக்குபூரா மாவட்டம்
(230) ஜைனப் பேகம் – டாக்டர் குலாம் அலி சப் அஸிஸ்டண்ட் சர்ஜன்சஹவர் 117 ஷேக்குபூரா மாவட்டம் அவர்களின் மனைவி
(231) சர்தார் அப்துர் ரஹ்மான் BA நவ் முஸ்லிம் காதியான்
(232) ஜைனப் பேகம் – சர்தார் அப்துர் ரஹ்மான் BA நவ் முஸ்லிம் காதியான் அவர்களின் மனைவி
(233) அஸீஸ் பிபி – பாபு குலாம் ரஸூல் டேகேதார் அவர்களின் மனைவி
(234) சவுத்ரி நதீர் அஹ்மத் தாலிப்பூர் பன்ங்வா, குர்தாஸ்பூர் மாவட்டம்
(235) மாஸ்டர் மவ்லா பக்ஷ் காதியான்
(236) ரஹ்மத் பிபி – மாஸ்டர் மவ்லா பக்ஷ் காதியான் அவர்களின் மனைவி
(237) சவுத்ரி அஃஸம் அலி சப் ஜஜ் ஷேக்குபூரா மாவட்டம்
(238) நிஃமத் பீபீ – சவுத்ரி நூர் அஹ்மத் கான் காதியான் அவர்களின் மனைவி
(239) சிராஜ் பேகம் – டாக்டர் பத்ருத்தீன் காதியான் அவர்களின் மனைவி
(240) சூஃபி கரம் இலாஹி – கம்போஸிடர் ஷிம்லா ஆலாதீன் கவர்ண்மண்ட் பிரஸ் ஷிம்லா
(241) சேட் அபூபக்ர் யூசுஃப் (ஜித்தா) காதியான்
(242) சேட் முஹம்மத் கவ்ஸ் ஹைதராபாத் தெற்கு

(243) ஹலீமா பேகம் – சேட் முஹம்மத் கவ்ஸ் ஹைதராபாத் தெற்கு அவர்களின் மனைவி
(244) ஹுஸைன் பிபி – ஹானரபுல் சவுத்ரி முஹம்மத் ஜஃபருல்லாஹ் கான் டஸ்கா சியால்கோட் மாவட்டம் அவர்களின் தாயார்
(245) ஹக்கீம் முஹம்மத் உமர் காதியான்
(246) பாபு முஹம்மத் பாஸில் சப்அவ்ர்சேர் ஃபிரோஸ்பூர்
(247) ஜைனப் பீபீ– பாபு முஹம்மத் பாஸில் சப்அவ்ர்சேர் ஃபிரோஸ்பூர் அவர்களின் மனைவி
(248) சவுத்ரி குலாம் அஹ்மத் கான் ராஜ்பூத், ஹோஷியார்பூர் மாவட்டம் லாஹூர் டுபைா ஊடிரசவ அட்வகேட்
(249) மலிக் இமாமுத்தீன் – மலிக் குலாமுத்தீன் சிக்னா சம்படியால் சியால்கோட் மாவட்டம் அவர்களின் மகன்
(250) மலிக் உமர் அலி – மலிக் ரஹீம் பக்ஷ் கோகர் தலைவர் முல்தான் அவர்களின் மகன்
(251) மாஸ்டர் கைருத்துன் – Superentdent Urdu Noraml School அமராவதி பரார்
(252) முஸஃப்பர் பேகம் பின்த் மர்ஸா முஹம்மத் அஷ்ரஃப் – முன்னாள் நாஸிம் ஜாயிதாத் சத்ர் அஞ்ஜுமன் அஹ்மதிய்யா காதியான்
(253) ஹமீதத்துன் நிஸா கான் – சவுத்ரி அபூ அல்ஹாஷிம் கான் நாடூர் ராஜ்ஷாஹி பங்கால் மாவட்டம்
(254) மாஸ்டர் பஸ்ல் கரீம் Head Master ராம்கட் சர்தாரான் லூதியானா மாவட்டம்
(255) ஹாபிழ் அப்துல் அலி B.A – நிஸாமுத்தீன் சிக்னா அதர்ஹமா ஷாஹ்பூர் மாவட்டம் அவர்களின் மகன்
(256) அப்துர் ரஹீம் – ஷேக் மீர் முஹம்மத் நவ்ஷஹர் சியால்கோட் அவர்களின் மகன்
(257) முஹம்மத் இஸ்மாயீல் முஃதபர் இப்னு குலாம் காதிர் மல்யானி காதியான்
(258) ஜைனப் பேகம் – மஹ்மூத் ஹஸன் ICS சப் கிளர்க் அவர்களின் மனைவி
(259) செய்யதா நுஸ்ரத் பானு – டாக்டர் அத்ருத்தீன் பம்பாயி அவர்களின் மனைவி
(260) சர்தார் பேகம் நவ் முஸ்லிமா – மலிக் ஃபஸல் ஹுஸைன் தாமா குஜ்ராத் மாவட்டம் அவர்களின் மனைவி
(261) சவுத்ரி குலாம் ஹஸன் சஃபேத்போஷ் முஹாஜிர் காதியான் முஹல்லா தாருல் ஃபஸல் ஹஸன் மன்ஸில்
(262) சவுத்ரி அலி அஹ்மத் கோட் கரம் பக்ஷ் சியால்கோட் மாவட்டம்
(263) மஹர் அலி சப் அஸிஸ்டன்ட் சர்ஜன் பஸால், பஹாவல்பூர் மாநிலம்
(264) டாக்டர் நதீர் அஹ்மத் கான் ககூ டிஸ்பன்ஸரி
(265) மலிக் முஹம்மத் இஸ்மாயீல் ஸ்ரீ கோபந்பூரி வணிகர்
(266) டாக்டர் முஹம்மத் இப்ராஹீம் கான் ஜலந்தர்
(267) ஹாஜி பகாவுல்லாஹ் அகவுண்ட் ஆபீஸ் போபால்
(268) அஸீஸ் பேகம் – கான் சாஹிப் பரக்கத் அலி அவர்களின் மனைவி
(269) ரஸ்யா பேகம் – மவ்லவி முஹம்மத் யஃகூப் மவ்லவி ஃபாஸில் காதியான் அவர்களின் சகோதரி
(270) அன்வர் பேகம் – மவ்லவி முஹம்மத் யஃகூப் மவ்லவி ஃபாஸில் காதியான் அவர்களின் மனைவி
(271) ஹிக்மத் பேகம் – அப்துல் முக்னீ கான் சாஹிப் அவர்களின் தாயார்
(272) கான் குலாம் முஹம்மத் கான் ஹஊஜ மியான்வாலி
(273) சவுத்ரி தில் முஹம்மத் ஃபாஸில் முபல்லிக் காதியான்
(274) மியான் அல்லாஹ் தத்தா – மாஹியா சிக்னா பலாவாலா ஜம்மு மாநிலம் அவர்களின் மகன்
(275) சவுத்ரி நூருத்தீன் தேல்தார் சக்
(276) ஃபிரோஸ் சர்கர் மர்ஹூம்
(277) காஸி முஹம்மத் சஷீத் அடிஸ்டண்ட் பிரோஸ்பூர் ஆர்ஸினல் மற்றும் மனைவி
(278) பீர் சலாஹுத்தீன் BA பிளேடர் ஃபிரோஸ்பூர்
(279) மஸ்ஊது அஹ்மது அமிர்தஸரி அவர்களின் தாயார்
(280) மஸ்ஊது அஹ்மது அமிர்தஸரி அவர்களின் சகோதரி
(281) சயீதா பேகம் – சேட் முஹம்மத் கவ்ஸ் ஹைதராபாத் தெற்கு அவர்களின் மகள்
(282) சலீம் பேகம் – சேட் முஹம்மத் கவ்ஸ் ஹைதராபாத் தெற்கு அவர்களின் மகள்
(283) அம்மத்துல் ஹபீஸ் பேகம் – சேட் முஹம்மத் கவ்ஸ் ஹைதராபாத் தெற்கு அவர்களின் மகள்
(284) சேட் முஹம்மத் அஃஸம் ஹைதராபாத் தெற்கு
(285) அஸீஸ் பேகம் – சேட் முஹம்மத் அஃஸம் ஹைதராபாத் தெற்கு அவர்களின் மனைவி
(286) அம்மத்துல் ஹய் – சேட் முஹம்மத் கவ்ஸ் அவர்களின் மகள்
(287) மஹ்மூதா பேகம் – முஹம்மத் முஹைனுத்தீன் ஹைதராபாத் தெற்கு அவர்களின் மனைவி
(288) அப்துல் அஸீஸ் சக்னா சக் சிகந்தர், குஜ்ராத் மாவட்டம்
(289) டாக்டர் நதீர் அஹ்மத் – சர்தார் அப்துர் ரஹ்மான் ஆப்ரிக்கா அவர்களின் மகன்
(290) முஹம்மத் பக்ஷ் அஹ்மதி சனோர் பட்டியாலா மாநிலம் மற்றும் அவரது மனைவியாகி கராமத்துன் நிஸா சாஹிபா
(291) சவுத்ரி கரீமுத்துன் பட்டி சக் 313/69 பென்ஷனர் முஹாஜிர் காதியான்
(292) முஹம்மத் ஷஃபீ – ஷேக் மீர் முஹம்மத் நவ்ஷஹ்ரா சியால்கோட் மாவட்டம் அவர்களின் மகன்
(293) அல்லாஹ் ஜவாயா அஹ்மதி சாகின் சினூட் ஹால் ஆக்ரா
(294) மர்யம் காத்தூன் – மவ்லவி அல்லாஹ் தத்தா சாஹிப் மர்ஹூம் ஜம்மு ஹால் முஹாஜிர் காதியான் அவர்களின் மனைவி
(295) சர்தார் பஷாரத் அஹ்மத் ஆஃப்ரிக்கா இப்னு மாஸ்டர் அப்துர் ரஹ்மான் சாஹிப் BA காதியான்
(296) டாக்டர் ஃபத்ஹுத்தீன் அஹ்மதி சான்கபூர்சும் காதியான்
(297) மர்யம் ஷாநவாஸ் கான் – மியான் அப்துர் ரஸ்ஸாக் சியால்கோட்டி அவர்களின் மகள்
(298) பிபி நஸீமா காத்துன் ஜித்தா
(299) ஷேக் அப்துல்லாஹ் மற்றும் ஸ்காட் கலாஸ்கோ ஸ்காட்லாண்ட்
(300) அஸீஸ் பானு – முன்ஷி ஃபயாஸ் அலி சாஹிப் சர்வா மீரட் மாவட்டம் அவர்களின் மகள்
(301) பாபு ஹுஷி முஹம்மத் பார்ஸல் கிளர்க், குஜ்ரான்வாலா மாவட்டம்
(302) நுஸ்ரத் சுல்தானா பேகம் சாஹிபா குஜ்ராத்தி சும்ம லாஹூரி
(303) முன்ஷி அப்துல் கரீம் சியால்கோட் மாவட்டம்
(304) செய்யத் முஹம்மத் ஹுஸைன் ஷாஹ் – அதா முஹம்மத் ஷா முஹ்தார் அவர்களின் மகன்
(305) கேப்டன் டாக்டர் முஹம்மத் ஜீ அஹ்மதி – செய்யத் முஹம்மத் ஹுஸைன் ஷா மெடிக்கல் அஃப்ஸர் நன்கானா சாஹிப் ஷேக்குபூரா மாவட்டம் அவர்களின் மகன்
(306) பரக்கத்துன் நிஸா பேகம் – செய்யது முஹம்மத் ஹுஸைன் ஷா முக்ரார் ஆம் அவர்களின் மனைவி

……☆……☆……☆……

## சூரிய, சந்திர கிரகண முன்னறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம்

ஹாஃபிழ் செய்யது ரஸூல் நியாஸ், முபல்லிக் நஸாரத் நஷ்ர் வ இஷாஅத் காதியான்
(தமிழாக்கம்: மவ்லவி ஷஹாபுத்துன்)

முஸ்லிம்கள் செயல் ரீதியாக பலவீனமாகி விடும்போது இஸ்லாம் வீழ்ச்சிக்கு இரையாகி விடும் என்று ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். மேலும் அந்த தருணத்தில் இஸ்லாத்தின் வெற்றிக்காக அல்லாஹ் இமாம் மஹ்தியை அனுப்புவான் என்று இஸ்லாம் உம்மத்திற்கு நற்செய்தியையும் வழங்கியுள்ளார்கள். அந்த மஹ்தியை அடையாளம் கண்டுகொள்வவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் சில அடையாளங்களையும் கூறியுள்ளார்கள். மேலும் இதன் மூலமாக முஸ்லிம்கள் மஹ்தியிடம் பைஅத் செய்து தம்முடைய ஆன்மீக முன்னேற்றங்களை அடைய வேண்டும் என்பதற்காகவும் இந்த அடையாளங்களை கூறியுள்ளார்கள்.

### சூரிய சந்திர கிரகணம் தொடர்பான மாபெரும் முன்னறிவிப்பு

ஹஸ்ரத் இமாம் தாரே குத்னீ (ரஹ்) அவர்களின் ஹதீஸ் நூலான சுனன் தாரே குத்னியில் பின்வருமாறு ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

’’اِنَّ لِمَهْدِيِّنَا آيَتَيْنِ لَمْ تَكُوْنَا مُنْذُ خَلْقِ السَّمٰوَاتِ وَالأَرْضِ، يَنْكَسِفُ الْقَمَرُ لِأَوَّلِ لَيْلَةٍ مِّنْ رَمَضَانَ ، وَ تَنْكَسِفُ الشَّمْسُ فِي النِّصْفِ مِنْهُ، وَلَمْ تَكُوْنَا مُنْذُ خَلَقَ اللهُ السَّمٰوَاتِ وَ الأَرْضَ‘‘

(சுனனுத்தாரே குத்னி கிதாபுல் ஈதைன் பாப் ஸிஃபதே ஸலாதுல் குஸூஃப் வல்குஸூஃப்)

முஹம்மது பின் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக நமது மஹ்திக்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன. அது வானங்கள் மற்றும் பூமி படைக்கப்பட்டதிலிருந்து இன்று வரை நடைபெறாதது. ரமலானுடைய ஆரம்ப இரவுகளில் சந்திரனுக்கு கிரகணமும் மேலும் அதனுடைய மத்திய நாட்களில் சூரிய கிரகணமும் ஏற்படும். வானங்கள் மற்றும் பூமி படைக்கப்பட்டதிலிருந்து இது நடைபெற்றது இல்லை.

பழைய ஏடுகளில் இந்த அடையாளத்தின் முன்னறிவிப்புகள் உள்ளன. மேலும் அல்லாஹ்வும் திருக்குர்ஆனில் இந்த அடையாளம் பற்றி கூறியிருக்கிறான்.

وَخَسَفَ الْقَمَرُ۔ وَجُمِعَ الشَّمْسُ وَالْقَمَرُ அதாவது சந்திரனுக்கு கிரகணம் ஏற்பட்டு மேலும் சூரியனும், சந்திரனும் ஒன்றிணைக்கப்படும் போதும்.

இது மட்டுமல்லாமல் முஸ்லிம்களின் இரண்டு மிக பெரிய பிரிவுகள் ஷியா மற்றும் சன்னி ஹதீஸ் நூல்களில் சூரிய, சந்திர கிரகணம் வெளிப்படுதல் இமாம் மஹ்தியின் அடையாளம் என்று கூறப்பட்டுள்ளது.

### சூரிய, சந்திர கிரகண அடையாளம் வெளிப்படுதல்

முஸ்லிம்கள் புறமிருந்து குறிப்பாக ஆலிம்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கடுமையான எதிர்ப்பு வந்தபொழுது இறை உதவி வேண்டி அன்னார் மிகவும் பணிவான முறையில் இறைவனிடம் மிக நீண்ட பிரார்த்தனை செய்தார்கள்.

(நூருல் ஹக் முதல் பாகம், ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 184)

இந்த துஆ செய்து முடித்த பிறகு ஒரு மாதம் கூட கடந்திருக்காது. அன்னார் செய்த உருக்கத்துடன் கூடிய அந்த பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். மேலும் இறைவன் அன்னாரின் உண்மைக்காக சந்திரன் மற்றும் சூரியனை வானத்தில் இரண்டு அடையாளங்களாக ஆக்கி விட்டான்.

இதன் அடிப்படையில் பதிநான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சந்திர கிரகணத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட (13,14,15) தேதிகளில் முதலாவது இரவில் அதாவது ரமலான் மாதம் 13ஆம் தேதி 1311 ஹிஜ்ரி அதாவது 21 மார்ச் 1894 அன்றும் மேலும் சூரிய கிரகணத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட (27,28,29) தேதிகளில் மத்திய நாளான அதாவது ரமலான் மாதம் 28ஆம் தேதி அதாவது 6 ஏப்ரல் 1894 அன்று கிரகணம் ஏற்பட்டது. அடுத்த ஆண்டு அதாவது 1895ல் இதே மாபெரும் அடையாளம் அமெரிக்காவிலும் தென்பட்டது.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிக உறுதியான முறையில் தம்முடைய உண்மைக்கு ஆதரவாக இந்த அடையாளங்களை முன்வைத்தவாறு கூறினார்கள்: இந்த 13 நூற்றாண்டுகளில் ஏராளமான நபர்கள் மஹ்தி என்று வாதம் செய்தார்கள். ஆனால் எவருக்காகவும் இந்த வானத்தின் அடையாளம் வெளிப்படவில்லை... எந்த இறைவனின் கையில் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக கூறுகிறேன். எனக்கு சான்றாக (எனது உண்மைக்கு) இந்த அடையாளம் வானத்தில் வெளிப்பட்டது....

நான் கஃபத்துல்லாஹ்வில் நின்று கொண்டு சத்தியம் செய்து கூற தயாராக இருக்கின்றேன். இந்த அடையாளம் மூலமாக நூற்றாண்டின் நிர்ணயம் தெளிவாகி விட்டது. ஏனென்றால் எப்பொழுது இந்த அடையாளம் 14ஆம் நூற்றாண்டில் ஒரு நபரை உண்மைப்படுத்துவதற்காக வெளிப்பட்டு விட்டதோ அதன் மூலம் பெருமானார் (ஸல்) அவர்கள் மஹ்தி வெளிப்படுவது 14 ஆம் நூற்றாண்டு என்று கூறியிருந்தது தெளிவாகிவிட்டது.

(தாஹ்ஃபா கோல்டவியா, ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 142,143)

அன்னார் அவர்கள் தம்முடைய கவிதையில் கூறுகிறார்கள்:

*கேளுங்கள்! மஸீஹ் வந்து விட்டார்; மஸீஹ் வந்து விட்டார் என்று வானத்திலிருந்து ஓசை வருகிறது.*

*மேலும் கேளுங்கள்! பூமியில் இருந்தும் ஓசை வருகிறது; வருகிற இமாமே வெற்றி அடைவார்.* (துர்ரே ஸமீன்)

**காதியானில் சூரிய கிரகணத்தை பார்த்தல்**

சூரிய, சந்திர கிரகணம் தென்பட்டபோது குறிப்பாக மக்காவாசிகள் மிகவும் மகிழ்ச்சியுடன் துள்ளி குதிக்க ஆரம்பித்தனர். இப்பொழுது இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கான நேரம் வந்து விட்டது. மேலும் இமாம் மஹ்தி பிறந்து விட்டார் என்று மகிழ்ச்சியடைந்தனர். இது மட்டுமல்லாமல் அனைத்து இஸ்லாமிய நாடுகளும் மிகவும் மகிழ்ச்சியை கொண்டாடின. சந்திர கிரகணம் நடைபெற்றதன் பிறகு சூரிய கிரகணத்தை பார்ப்பதற்காக மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இணைந்து கிரகணத் தொழுகை தொழும் நிய்யத்தில் பல சஹாபிகள் காதியான் வந்தனர்.

ஆகையால் ஹஸ்ரத் மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ரமலானுடைய மாதத்தில் சூரிய, சந்திர கிரகணம் தொடர்பான முன்னறிவிப்பு தாரு குத்னீ போன்ற ஹதீஸ் நூல்களில் மஹ்திக்கான அடையாளமாக சொல்லப்பட்டிருக்கின்றது. மார்ச் **1894**ல் ரமலான் மாதத்தில் சந்திரனுக்கு கிரகணம் ஏற்பட்டது. மேலும் ரமலான் மாதத்தில் சூரியனுக்கு கிரகணம் ஏற்படுவதற்கான நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டு சகோதரர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இணைந்து அடையாளத்தை பார்க்க வேண்டும். மேலும் கிரகண தொழுகையை தொழ வேண்டும் என்ற எண்ணத்துடன் சனிக்கிழமை மாலை லாஹூரில் இருந்து புறப்பட்டு ஏறக்குறைய இரவு **11** மணிக்கு பட்டாலா வந்தடைந்தனர்.

அடுத்த நாள் (**6 ஏப்ரல் 1894**) காலையில் கிரகணம் ஏற்பட இருந்தது. புயல் வீசிக் கொண்டிருந்தது. மேகங்கள் நிறைந்தும் மின்னல்கள் வெட்டிக் கொண்டும் இருந்தன. காற்று எதிர் திசையில் இருந்தது. புழுதி கண்களில் விழுந்து கொண்டிருந்தன. பாதங்கள் நன்றாக எழவில்லை. மேலும் பாதங்கள் மின்னலின் அந்த வெளிச்சத்தில் தென்பட்டு கொண்டிருந்தது. அவர்களுடைய ஊரை சேர்ந்த நண்பர் மவ்லவி அப்துல் அலி சாஹிப் அவர்களும் உடன் இருந்தார்.

(மிர்ஸா மஸ்ஊத் பேக் சாஹிப் அறிவிக்கிறார்கள்: மவ்லவி அப்துல் அலி சாஹிப் அவர்கள் மர்ஹூம் மிர்ஸா அய்யூப் பேக் சாஹிபின் ஜமாஅத் மற்றும் காலானூரில் ஒரே பகுதியை சார்ந்தவர் ஆவார்) அனைவரும் என்ன ஆனாலும் இரவிலேயே காதியான் சென்று விட வேண்டும் என்று திட்டமிட்டனர். ஆகையால் மூவரும் வழியில் நின்று கொண்டு மிகவும் உருக்கத்துடன் துஆ செய்தனர்.

அதாவது இறைவா! நீ பூமி மற்றும் வானங்களின் மீது வல்லமை கொண்டவனாவாய். நாங்கள் உன்னுடைய பணிவான அடியார்கள் ஆவோம். உன்னுடைய மஸீஹை காண்பதற்காக செல்கிறோம். மேலும் நாங்கள் நடைபயணம் செய்கிறோம். குளிர் காலமாக இருக்கிறது. நீயே எங்கள் மீது கருணை காட்டுவாயாக. எங்களுக்காக எங்களுடைய வழியை எளிமையாக்கி தருவாயாக. மேலும் இந்த கடினமான எதிர்ப்பை தூரமாக்கி தருவாயாக.

தற்போது பிரார்த்தனையின் கடைசி சொற்கள் நாவில் இருந்தபொழுதே காற்று திசை மாறியது. முன்புறம் இருந்து பின்புறமாக வீச ஆரம்பித்தது. மேலும் எங்களுடைய பயணத்திற்கு ஆதரவாக ஆகிவிட்டது. எந்த அளவுக்கு நாங்கள் உணர்ந்தோம் என்றால் நாங்கள் காற்றில் பறந்து சென்று கொண்டிருக்கின்றோம் என்று தோன்றியது. சிறிது நேரத்திலேயே ஓடையை அடைந்து விட்டோம். அந்த இடத்தில் சிறிது மழைத்துளிகள் ஆரம்பமாகி விட்டன. ஓடையின் கரையில் ஒரு வீடு இருந்தது. அதில் நாங்கள் நுழைந்து விட்டோம்.

அந்த நாட்களில் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பெரும்பாலும் வழிகளில் கொள்ளைக்காரர்கள் தாக்குதல் நடந்து கொண்டிருந்தது. ஆகையால் விளக்கு ஏற்றி பார்த்தோம். அந்த வீடு காலியாக இருந்தது. மேலும் இரண்டு எருவட்டைகளும் மேலும் ஒரு செங்கலும் இருந்தது. ஒவ்வொருவரும் தனது தலைக்கு அதை வைத்துக் கொண்டு நிலத்தில் உறங்கி விட்டோம். சிறிது நேரத்திற்குப் பிறகு கண்கள் திறந்தன. நட்சத்திரங்கள் தென்பட்டன. வானம் தெளிவாக இருந்தது. மேலும் புயலுக்கான எவ்வித அடையாளமும் இல்லை. ஆகையால் பிறகு நாங்கள் பயணத்தை தொடர்ந்தோம். மேலும் ஸஹர் உணவு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உணவு விரிப்பில் உண்டோம்.

காலையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் கிரகண தொழுகை தொழுதோம். மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிப் அம்ரூஹி அவர்கள் முபாரக் பள்ளிவாசலின் மாடியில் தொழ வைத்தார்கள். மூன்று மணி நேரம் ஏறக்குறைய இந்த தொழுகை நடந்து கொண்டிருந்தது. பல நண்பர்கள் கண்ணாடியில் கருப்பு மை பூசியிருந்தார்கள். அதன் மூலம் கிரகணத்தை பார்ப்பதில் மும்முரமாக இருந்தனர். அப்பொழுது சிறிதாக கருமை கண்ணாடியில் பட ஆரம்பித்தவுடன் யாரோ ஒருவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கூறினார்:

சூரியனுக்கு கிரணம் ஆரம்பமாகி விட்டது. அன்னார் (அலை) அவர்கள் அந்த கண்ணாடியின் மூலமாக பார்த்தார்கள். அப்பொழுது மிகவும் நுண்ணியதாக கருமை தென்பட்டது. இந்த கிரகணத்தை நாம் பார்த்து விட்டோம். ஆனால் இது எந்த அளவுக்கு நுண்ணியதாக இருந்தது என்றால் பொது மக்களுடைய கண்களிலிருந்து இது மறைந்துவிடும். இவ்வாறு ஒரு மாபெரும் முன்னறிவிப்பின் அடையாளம் சந்தேகத்திற்கு உள்ளாகி விடும் என்று அன்னார் (அலை) அவர்கள் தன்னுடைய வருத்தத்தை தெரியப்படுத்தினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் பல முறை இதை கூறினார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு கருப்பாக ஆரம்பித்தது. எந்த அளவுக்கு என்றால் சூரியனின் பெரும் பகுதி இருண்டு

விட்டது. அப்பொழுது ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: இன்று நாம் கனவில் வெங்காயத்தை கண்டோம். அதனுடைய விளக்கம் துக்கம் ஆகும். ஆகையால் ஆரம்பத்தில் கருமை குறைவாக இருந்ததால் இது தெளிவானது.

(அஸ்ஹாபே அஹ்மத், தொகுதி 1 பக்கம் 92,94 ஹஸ்ரத் மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் (ரலி) அவர்களின் அறிவிப்பு)

**கிரகணத்தின் அடையாளத்தை பார்த்து பைஅத் செய்த சஹாபிகளின் சம்பவங்கள்**

இமாம் மஹ்தியின் உண்மைக்கான அடையாளத்தின் இந்த முன்னறிவிப்பு பெருமளவு பிரபலமாகி விட்டது. ஆகையால் இந்த அடையாளம் வெளிப்பட்டதும், தீய ஆலிம்கள் தங்களுடைய பழக்கத்திற்கேற்ப மறுத்தனர். மேலும் உண்மையை ஏற்றுக் கொள்ள இஸ்லாமிய மக்களை முடிந்த அளவு தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஆயிரக்கணக்கான நல்லியல்பு கொண்ட மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பினை பெற்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

நமக்கென்று சூரிய, சந்திர கிரகணம் வெளிப்பட்டது. மேலும் நூற்றுக்கணக்கான நபர்கள் அதைப் பார்த்து நமது ஜமாஅத்தில் இணைந்தார்கள். மேலும் இந்த சூரிய, சந்திர கிரகணத்தின் மூலமாக நமக்கு மிக அதிகமாக மகிழ்ச்சி ஏற்பட்டது. மேலும் எதிரிகளுக்கு இழிவும் ஏற்பட்டது. வாக்களிக்கப்பட்ட மஹ்தி என நாம் வாதிக்கும்போது சூரிய, சந்திர கிரகணம் வெளிப்பட வேண்டும். மேலும் அரபு நாட்டில் அதன் பெயரும், அடையாளமும் இருக்கக்கூடாது என்று அவர்களது உள்ளம் விரும்பியதை அவர்கள் சத்தியம் செய்து கூற முடியுமா? மேலும் தங்களுடைய விருப்பத்திற்கு மாற்றமாக இது வெளிப்பட்டுவிட்டபோது அவர்களுடைய உள்ளத்திற்கு துக்கம் ஏற்பட்டிருக்கும். மேலும் அதில் தங்களின் இழிவை அவர்கள் பார்த்திருப்பார்கள்.

(அன்வாருல் இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 9 பக்கம் 33)

இந்த வலுவான அடையாளத்தைப் பார்த்து அல்லது அதன் காரணத்தால் அஹ்மதிய்யத்தில் இணைந்த நல்லுள்ளம் கொண்டவர்களுடைய பெருமளவிலான சம்பவங்கள் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் கிடைக்கின்றன. உதாரணத்திற்காக இரண்டு சம்பவங்களை கீழே பதிவு செய்கிறேன்.

(1) ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் தமது சொந்த அனுபவத்தை எடுத்து வைக்கின்றார்கள்:

மிகப்பழைய விஷயமாகும். 1966 ஆக இருக்கலாம். நான் சர்கோதா பகுதியில் வக்ஃபே ஆர்ஸி (தற்காலிக அர்ப்பணம் எனும் திட்டத்தின்கீழ்) சென்றிருந்தேன். ஒரு மிக நீண்ட தூரத்தில் இருக்கின்ற ஒரு கிராமத்திற்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அங்கு ஒரு மூதாட்டியை சந்தித்தேன். நாங்கள் ரப்வாவில் இருந்து வருகின்றோம். அஹ்மதிகள் ஆவோம் என்று எங்களைப் பற்றி அறிமுகம் செய்தோம். அப்போது அவர் கூறினார்: நானும் அஹ்மதி ஆவேன். சூரிய, சந்திர கிரகணங்களை பார்த்து அந்த காலத்தில் அஹ்மதி ஆனோம். அந்த மூதாட்டி கூறினார்: நான் சிறிய பிள்ளையாக இருந்தேன். மேலும் என்னுடைய பெற்றோர் இருந்தார்கள். இந்தப் பகுதி முழுவதும் காடுகளாக இருந்தன. கிராமமாக இருந்தன. இந்த கிராமத்தில் படிப்பறிவில்லாத மக்கள் இருந்தார்கள். இருப்பினும் சந்திர, சூரிய கிரகணத்தின் அடையாளம் பார்த்து அஹ்மதி ஆகினர். ஆகையால் அல்லாஹ் பெரும்பாலான நபர்களுக்கு அந்த காலகட்டத்தில் இந்த அடையாளத்தின் மூலமாக நேர்வழியை வழங்கினான்.

(குத்பா ஜுமுஆ 30 ஜூன் 2006)

(2) ஹஸ்ரத் குலாம் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

என்னுடைய கிராமத்தில் ஆரம்ப காலத்தில் மவ்லவி பதுருத்தீன் சாஹிப் என்பவர் இருந்தார். அந்த நாட்களில் என்னுடைய வயது ஏறக்குறைய 15 ஆக இருந்தது. நான் மவ்லவி ஃபக்ருதீன் சாஹிப் அவர்களுடைய வீட்டிற்கு முன்பு அவர்களுடன் நின்று கொண்டிருந்தேன். பகலில் சூரியனுக்கு கிரகணம் ஏற்பட்டது. மவ்லவி சாஹிப் அவர்கள் கூறினார்கள்: சுப்ஹானல்லாஹ். மஹ்தி சாஹிபின் (வருகையின்) அடையாளம் வெளிப்பட்டது. மேலும் அவர்களுடைய வருகைக்கான நேரம் வந்து விட்டது. சிறிது காலம் கடந்தது. மவ்லவி சாஹிப் அஹ்மதி ஆகிவிட்டார். மவ்லவி சாஹிப் அவர்கள் மிகவும் கலப்பற்றதன்மை கொண்டவராகவும், மேலும் நல்லியல்பு கொண்டவராகவும், பற்று நிறைந்தவராகவும் இருந்தார்கள். தம்முடைய பெற்றோர் மற்றும் மனைவியை ஓர் ஆண்டின் முயற்சிக்குப் பிறகு அன்னார் அஹ்மதியாக ஆக்கிவிட்டார்.

(ரிஜிஸ்டர் ரிவாயாத் சஹாபா, கைர் மத்புஆ, பாகம் 6 பக்கம் 305, 306 ரிவாயத் ஹஸ்ரத் குலாம் முஹம்மது சாஹிப் (ரலி) வாலித் அலி பக்ஷ் சாஹிப் காதிராபாத் ஜில்லா அமிர்தசரஸ், ஆதாரம் குத்பா ஜுமுஆ 20 மார்ச் 2015)

**சந்திர சூரிய அடையாளத்தை மறுப்பது என்பது இறைவனுடைய கோபத்தை அழைப்பதாகும்**

இந்த மாபெரும் அடையாளம் வெளிப்பட்டு இன்றோடு 125 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் பரிதாபத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இன்றும் முஸ்லிம்கள் மற்றும் மற்ற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் முழு உலகத்திற்கு வாக்களிக்கப்பட்ட அந்த நபருக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே இறைவனுடைய இந்த தூய்மையானவரை மறுப்பது என்பது இறைவனுடைய கோபத்தை அழைப்பதாகும்.

ஹஸ்ரத் அமீருல் மூமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த அடையாளம் முழுமையடைந்து கொண்டிருக்கின்றது என்றால் மஸீஹின் வருகை சம்பந்தமாக ஏன் இன்னும் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். மஸீஹை கியாமத்துடன் இணைப்பதற்கு ஏன் முயற்சி செய்யப்படுகிறது.

இது வெறும் பிடிவாதம் ஆகும். இறைவனே இவர்களுக்கு அறிவை வழங்க வேண்டும். பிறகு ஒரு ஹதீஸில் மஸீஹின் வருகையின் அடையாளமாகவும், (மேலும் இது எவ்வாறான ஹதீஸ் என்றால் அஹ்மதிகள் இதை முன் வைக்கும்போதெல்லாம் எதிரிகளுக்கு இதை மறுப்பதற்கான எந்த வாய்ப்பும் கிடைப்பதில்லை). அது சூரியன் மற்றும் சந்திரனின் கிரகணம் தொடர்பானது ஆகும். இந்த அடையாளத்தை நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய உண்மைத்துவத்திற்காக முன் வைக்கின்றோம்.

இமாம்கள், திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் ஞானத்தைப் பெற்று மஸீஹ் மவ்வூது அவர்களின் காலம் இதுவாகும் என்று கூறியுள்ளார்கள். முந்தைய மற்றும் தற்போதய ஆலிம்கள் கூறியுள்ளார்கள். இந்த காலகட்டம் நமக்கு தெளிவுபடுத்துகிறது. மேலும் முஸ்லிம்களுடைய சூழலும் என்ன கூறுகின்றது என்றால் நபி வர வேண்டும் என்பதாகும். திருக்குர்ஆன் அடையாளங்களை கூறிவிட்டது. அதில் சிலவற்றை நான் எடுத்துக் கூறி விட்டேன். இது இறுதி காலத்தின் கூற்றுகள் ஆகும். எப்பொழுது இந்த விஷயங்கள் எல்லாம் பேசப்படுகின்றனவோ – நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும்.

பிறகு ஒரு தெள்ளத் தெளிவான அடையாளம் சவாலாக முன் வைக்கப்படுகின்றது. அதனுடைய விளக்கம் இமாம் பாகர் அவர்கள் கூறிவிட்டார்கள். அது என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் சூரிய, சந்திர கிரகணம் ஏற்பட வேண்டும். அவ்வாறிருக்கும்போது, பிறகு இப்பொழுது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்கான காலம் ஆகவில்லை என்று கூறுவதே இறைவனுடைய கோபத்தை சப்தமிட்டு அழைப்பது போன்றது ஆகும்.

(குத்பா ஜுமுஆ 3 பிப்ரவரி 2006, குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 4 பக்கம் 72)

*நீயே எனக்காக வானத்தை ஒரு சாட்சியாக ஆக்கினாய்.*
*சந்திரன் மற்றும் சூரியன் எனக்கென்று இருளாக மாறியது.*
*தூய்மையான உள்ளத்திற்கு அதிகமான சான்றுகளின் தேவையில்லை.*
*உள்ளத்தில் இறையச்சம் இருந்தால் ஓர் அடையாளம் போதுமானது.*
*உலகத்தில் யாராவது ஒரு பொய்யர் இருக்கிறாரா?*
*உதாரணத்திற்கு சிலரைக் கொண்டு வந்து காட்டுங்கள்.*
*என்னைப் போன்று அவருக்கு திரும்பத் திரும்ப உதவிகள் கிடைத்ததுண்டா?*

இறைவனிடம் என்னுடைய பிரார்த்தனை என்னவென்றால, முஸ்லிம்களுக்கும் மேலும் மற்ற மார்க்கத்தை சார்ந்தவர்களுக்கும் இந்த மாபெரும் அடையாளத்தை புரிந்து மேலும் முழு உலக சமுதாயத்திற்காக வாக்களிக்கப்பட்டு வந்தவரை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பினை தந்தருள்வானாக. ஆமீன்.

......☆......☆......☆......

## பதர் பத்திரிகையை நீங்களும் படித்து உங்களது நண்பர்களையும், சகோதரர்களையும் படிப்பதற்கு கவனமூட்டவும்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் டிசம்பர் 2014 ஆண்டு பதர் பத்திரிகையின் சிறப்பு வெளியீட்டின் போது தமது தூதுச் செய்தியை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள் :

இந்த பத்திரிகை ஜமா அத்தின் ஆன்மீக சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்டது. மேலும் நமது முன்னோர்களுக்கு நெருக்கடியான சூழ்நிலைகள் இருந்தும் கூட தமது உயிரை அர்ப்பணித்தவாறு இப்பத்திரிகையை தொடர்ந்து இயங்கி வரும்படி செய்துள்ளனர். மேலும் அவர்களுடைய துஆக்கள் மற்றும் தூய முயற்சிகளின் அருளால் தான் இன்று வரை இது தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கின்றது என்ற இவ்விஷயத்தை பதர் துறையும், பதர் பத்திரிகையின் வாசகர்களும் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். மேலும் அதிகம் அதிகமான அஹ்மதிகள் இதைப் படிக்க வேண்டும். மேலும் இதிலிருந்து பலன் பெற வேண்டும் என்பதை இவ்விஷயமானது நம்மிடம் எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் தனது அருளால் இந்திய அஹ்மதிகளுக்கு குறிப்பாகவும், மற்ற நாடுகளில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்கு பொதுவாகவும் இதைப் படிப்பதற்கும், இதனோடு தொடர்புள்ள அருட்களை சேகரிப்பதற்கும் நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஆமீன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது மிகவும் முக்கியமான மற்றும் எழுச்சியூட்டக்கூடிய இந்த கூற்றுகளுக்கேற்ப, இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவர்களிடம் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால், ஒவ்வொரு வீட்டிலும் பதர் பத்திரிகை படிப்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகும். இதில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கூற்றுகள் மட்டுமின்றி ஹுஸூர் அவர்களுடைய குத்பா ஜுமுஆ பேருரை மற்றும் சொற்பொழிவுகள் மற்றும் ஹுஸூர் அவர்கள் பல்வேறு நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய அறிக்கைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றன. இதைப் படிப்பது ஒவ்வொரு அஹ்மதிக்கும் கட்டாயமாகும். அல்லாஹ்வின் அருளால் பதர் பத்திரிகை தற்போது ஹிந்தி, வங்காளம், தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் ஒடியா ஆகிய மொழிகளிலும் வெளி வந்து கொண்டிருக்கின்றது.

அஹ்மதிகளில் எவர்கள் தற்போது வரை பதர் பத்திரிகையை வாங்கவில்லையோ அவர்கள் பதர் பத்திரிகையை தாமும் வாங்கி படிக்க வேண்டும். மேலும் தம்முடைய குழந்தைகள் மற்றும் வீட்டிலுள்ள இதர உறுப்பினர்கள் அனைவரையும் இந்த பத்திரிகையை படிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஹுஸூர் அவர்களின் கூற்றிற்கேற்பே செயல்படும் நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

பதர் பத்திரிகை முறையாக கிடைக்கவில்லை என்பது தொடர்பான புகாராக இருந்தாலும் சரி; அல்லது சந்தா செலுத்துவது தொடர்பான விஷயமாக இருந்தாலும் சரி கீழ்க்கண்ட எனது தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

+91 1872 224757 +91 99153 79255

managerbadrqnd@gmail.com

**ஷேக் முஜாஹித் அஹ்மது**
(பதர் பத்திரிகையின் மேனேஜர், காதியான்)

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் – கடந்த கால சான்றோர்களின் முன்னறிவிப்புகளின் ஒளியில்

மாமூன் ரஷீத் தப்ரீஸ், வரலாற்றுத் துறை, காதியான்

தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

உலகில் நபி அல்லது ரஸூல்மார்கள் தோன்றும் போதெல்லாம் அவர்களின் வருகையின் செய்தியை எல்லாம் வல்ல இறைவன் அவர்கள் தோன்றுவதற்கு முன்பே தன்னுடைய நல்லடியார்களுக்கு அறிவித்து விடுகின்றான். இறை நெருக்கம் பெற்ற வலிமார்கள் அந்த செய்திகளை அடுத்து வரும் சந்ததியினருக்கு முன்னறிவிப்பின் வடிவில் பாதுகாத்து வைத்து விட்டு செல்கின்றனர். அந்த முன்னறிவிப்பில் வாக்களிக்கப்பட்ட நபியின் வருகையின் காலமும் அவர் தோன்றக்கூடிய இடமும் வாக்களிக்கப்பட்டவர் தோன்றக்கூடிய காலத்தின் அடையாளங்கள் மற்றும் பண்புகளும் கூறப்பட்டிருக்கும்.

பைபிளில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாகவும், நம்முடைய அன்பிற்குரிய தலைவரும், எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் இஸ்ரவேல் கோத்திரத்தின் நபிமார்களின் முன்னறிவிப்புகள் கிடைக்கின்றன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய உம்மத்தை சேர்ந்த ஆலிம்கள் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்: عُلَمَاءُ أُمَّتِي كَأَنْبِيَاءِ بَنِي إِسْرَائِيلَ அதாவது என் உம்மத்தைச் சேர்ந்த உலமாக்கள் (சமுதாயத்தின் ஆலிம்கள்) இஸ்ரவேல் சமுதாயத்தினரின் நபிமார்களுக்கு ஒப்பானவர்களாக திகழ்வார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயத்தில் முன்சென்ற சான்றோர்கள் மற்றும் இறைநேசர்கள் பிற்காலத்தில் தோன்றக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஹ்தி மற்றும் மஸீஹ் தொடர்பாக அவர்கள் தோன்றுவதற்கு முன்பே இஸ்ரவேல் நபிமார்களுக்கு ஒப்பான முன்னறிவிப்புகளை செய்துள்ளார்கள். அந்த முன்னறிவிப்புகள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் மூலமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் பகலைப்போன்று நிறைவேறியுள்ளன. மேலும் அன்னாரின் உண்மைத்துவத்திற்கு ஒரு சான்றாக அமைந்துள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: முஸ்லிம்களில் ஆயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கையில் ஆன்மீக காட்சியை காணக் கூடியவர்கள் தங்களுடைய ஆன்மீக காட்சிகள் மற்றும் இறை உரையாடல்களிலிருந்து அவர்கள் அனைவரும் தேர்ந்தெடுத்த ஏகோபித்த கருத்தானது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் தோற்றம் பதிநான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தை விட ஒருபோதும் அதிகரிக்காது. மேலும் அனைத்து முன்னவர்கள் மற்றும் பின்னவர்களிலும் அதிகமான ஆன்மீக காட்சிகளை காணக்கூடிய ஒரு கூட்டத்தினர் அனைவரும் பொய்யர்களாக இருப்பதும், அவர்களின் கருத்துக் கணிப்புகள் அனைத்தும் பொய்யானதாக இருப்பதும் ஒருபோதும் சாத்தியமில்லை.

(தஹ்ஃபா கோல்டவியா, ரூஹானீ கஸாயின் தொகுதி 17 பக்கம் 316)

(1) உம்மத்தைச் சேர்ந்த அந்த நல்ல சான்றோர்களில் ஒருவரான அல்லாமா அப்துல் வஹ்ஹாப் அஷ்ஷிஃரானி (ரஹ்) மரணம் 976 ஹிஜ்ரி அவர்கள் அல் யவாகீத்து வல் ஜவாயிர் என்ற தன்னுடைய புத்தகத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

”مَوْلِدُهُ لَيْلَةَ النِّصْفِ مِنْ شَعْبَانَ سَنَةَ خَمْسِيْنَ وَ مِائَتَيْنِ بَعْدَ الْأَلْفِ“

இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 1250 ஆம் ஆண்டில் நிகழும். (நூருல் அப்ஸார் ஃபீ மனாகிபி அலீ பைத்துந் நபிய்யி அல்முக்தார்)

(2) பன்னிரண்டாம் நூற்றாண்டின் முஜத்தித் ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் தஹ்லவி (ரஹ்) அவர்களுக்கு இறைவன் சுயமே அளித்த ஞானத்தின் அடிப்படையில் அன்னார் இவ்வாறு கூறுகிறார்கள்:

”اَلْمَهْدِيُّ تَهَيَّأَ لِلْخُرُوْجِ“

அதாவது இமாம் மஹ்தி தோன்றுவதற்கு ஆயத்தமாகி விட்டார்கள். (தஃப்ஹீமாத்தே இலாஹிய்யா, தொகுதி 2 பக்கம் 123)

நவாப் ஸித்தீக் ஹஸன் கான் சாஹிப் அவர்கள் ஹிஜஜுல் கிராமா ஃபீ ஆஸாரில் கியாமா என்ற புத்தகத்தின் 394–ம் பக்கத்தில் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தோன்றக்கூடிய காலம் தொடர்பாக ஃபார்ஸியில் இவ்வாறு எழுதியுள்ளார்கள். அதன் தமிழாக்கம்; ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் தஹ்லவி (ரஹ்) அவர்கள் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தோன்றக்கூடிய காலம் தொடர்பாக சிராகே தீன் (மார்க்கத்தின் விளக்கு) என்ற வார்த்தையில் கூறியுள்ளார்கள். அந்த காலம் (ஹுரூஃபே அப்ஜத்) கணித எண்களின் அடிப்படையில் 1268 (ஹிஜ்ரி வருடம்) ஆகும்.

(3) தில்லிக்கு அருகில் ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன்பு பிரசித்திப் பெற்ற உன்னதமான ஆன்மீக காட்சியை

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

(கஷ்ஃப்) காணக்கூடிய மற்றும் அற்புதங்களை நிகழ்த்தக்கூடிய பெரியவர் ஹஸ்ரத் நிஃமத்துல்லாஹ் ஷாஹ் வலி (ரஹ்) அவர்கள் வாழ்ந்துள்ளார்கள். அவர்களின் பிரசித்தி பெற்ற பாரசீக கஸீதாவில் இறுதிக் காலத்தின் நிலைமைகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

அன்னார் கூறுகிறார்கள்:

مہدیٔ وقت و عیسیٰ دوراں

ہر دو را شاہسوار مے بینم

அதாவது அந்த காலத்தின் மஹ்தி மற்றும் ஈஸாவை நான் குதிரை வீரராக காண்கின்றேன்.

(அர்பயீன் ஃபீ அஸ்வாலில் மஹ்தியீன் 1268 ஹிஜ்ரியில் அச்சடிக்கப்பட்டது)

(4) ஹிஜ்ரி 638–ல் மரணித்த ஹஸ்ரத் ஷேக் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 628 ஆம் ஆண்டில் இவ்வாறு கூறுகிறார்கள்:

‘‘وَيَكُوْنُ ظُهُوْرُهٗ بَعْدَ مَضِيِّ خ ف ج مِنَ الْهِجْرَةِ’’

இமாம் மஹ்தியின் தோற்றம் ஹிஜ்ரி ஆண்டிற்கு ஏற்ப ‘‘خ ف ج’’ கடந்த பிறகு நிகழும்.

(முகத்தமா இப்னு குல்தூன் பக்கம் 354, மவ்லானா ஸயீது ஹுஸைன் கான் யூசுஃபி ஃபாஸில் அவர்களின் மொழிபெயர்ப்பு)

خ 600, ف 80, ج 3 என்ற எண்ணைக் கொண்டு கணிதவியலில் கணிக்கும்போது 683 ஆக இருக்கிறது. இது கூறப்பட்ட ஆண்டோ 628 ஹிஜ்ரி ஆகும். 628ஐ 683 உடன் கூட்டினால் ஹிஜ்ரி 1311 ஆண்டுகள் வருகிறது. இந்த ஆண்டு இமாம் மஹ்திக்குரிய அடையாளமான சூரிய சந்திர கிரகணம் நிகழ்ந்த ஆண்டாகும்.

(5) ஈரானீ சான்றோர் ஷேக் அலி அஸ்கர் பரோஜர்தி மிகப்பெரிய பேச்சாளர் மற்றும் எண்ணற்ற புத்தகங்களை எழுதியவர் ஆவார். இவர் தனது புத்தகமான நூருல் அன்வார் பக்கம் 215ல் இவ்வாறு எழுதுகிறார்: ஸர்கி என்ற ஆண்டில் நீ உயிருடன் இருந்தால் மன்னராட்சி மற்றும் மார்க்கத்தில் புரட்சி ஏற்படும். ஸர்கி அப்ஜத் எண்ணின் அடிப்படையில் கணித்தால் 1290 வருகிறது.

(இமாம் மஹ்தியின் தோற்றம் முஹம்மது அஸதுல்லாஹ் கஷ்மீரி எழுதியது, பக்கம் 417)

(6) அரபு நாட்டிற்கு மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின்போது அங்குள்ள ஆலிம்கள் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் வருகையை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பதை கண்ட காஜா ஹுஸைன் நிஸாமி அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

என்ன ஒரு வியப்பிற்குரிய விஷயம். இதுவே அதற்கான நேரமும் ஆகும். மேலும் 1330ல் ஸநோஸி அறிவித்தபடி ஹஸ்ரத் இமாம் மஹ்தி அவர்கள் தோன்ற வேண்டும். அவ்வாறு அந்த நேரம் வரவில்லை என்றால் ஹிஜ்ரி 40 வரை தோன்றுவார் என்பது மிக உறுதியானதாகும். ஏனென்றால் எண்ணற்ற சான்றோர்களின் முன்னறிவிப்புகளை இணைத்தால் 40 வரை தோன்ற வேண்டும் என்பதில் அனைவரின் கருத்தும் ஒன்றுபடுகின்றது.

(ஷேக் ஸநோஸி அவ்ர் ஸஹூரே இமாம் மஹ்தி ஆகிருஸ் ஸமான் – கடைசிப் பக்கம்)

(7) சியால்கோட்டைச் சேர்ந்த இறைநேசரும் அறிஞருமான ஹஸ்ரத் ஹாஃபிழ் பர்குர்தார் கான் (ரஹ்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை தொடர்பாக கூறுகிறார்கள்: ஹிஜ்ரி ஆண்டின் 1300 வருடங்கள் கழிந்த பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றுவார். இங்கு ஹஸ்ரத் ஹாஃபிழ் பர்குர்தார் கான் (ரஹ்) அவர்கள் தோன்றுவார் என்ற கொள்கையில் தான் இருக்கின்றாரே தவிர வானத்திலிருந்து இறங்குவார் என்ற கொள்கையில் இல்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(8) புகழ்பெற்ற ஷியா அறிஞர் ஹஸ்ரத் அபூ ஸயீத் கானிம் ஹிந்தி என்பவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை (கஷ்ஃபில்) ஆன்மீகக் காட்சியில் கண்டார்கள். அவர்கள் அந்த முழு கனவையும் கூறிவிட்டு இறுதியில் இவ்வாறு கூறுகிறார்கள்:

‘‘كُلُّ ذٰلِكَ بِكَلَامِ الْهِنْدِ’’ அதாவது இந்த ஆன்மீக காட்சி முழுவதிலும் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் எந்த மொழியில் பேசினார்களோ அவை அனைத்தும் இந்திய நாட்டின் மொழியாக இருந்தது.

(ஸாஃபி ஷரஹ் உஸூல் காஃபி, கிதாபுல் ஹுஜ்ஜா, பாப் மவ்லிது ஸாஹிபுஸ் ஸமான், பாகம் 3 தொகுதி 2 பக்கம் 304)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தாய்மொழியோ பஞ்சாபியாக இருந்தது. எனினும் இந்த ஆன்மீக காட்சியில் இந்தியாவில் பேசக்கூடிய இரண்டு மொழிகளை குறித்தே கூறப்பட்டுள்ளது. அன்னாரின் பெரும்பாலான நூல்கள் அதே மொழியில் தான் உள்ளன.

(9) சூஃபி அறிஞர் ஹஸ்ரத் ஷேக் ஹஸன் அல் இராகி அவர்கள் காயத்துல் மக்ஸூத் என்ற புத்தகத்தில் இவ்வாறு எழுதுகிறார்: நான் உங்களுக்கு ஒரு விஷயத்தை கூறுகின்றேன். சிரியா நாட்டில் இளமைப் பருவத்தில் நான் ஜாமிஆ பனீ உமய்யாவில் சேர்ந்தபோது ஒரு நபர் நாற்காலியில் அமர்ந்தவாறு மஹ்தி மற்றும் அவர் தோன்றக்கூடிய காலம் தொடர்பாக விவாதித்துக் கொண்டிருப்பதை கண்டேன். அப்போதிலிருந்து மஹ்தியின் மீதான அன்பு என் உள்ளத்தில் நிலை கொண்டு விட்டது.

மேலும் நான் அல்லாஹ்வே! அவருடன் என்னை சந்திக்க வைப்பாயாக என்று துஆ செய்வதில் ஈடுபட்டுவிட்டேன். ஒரு வருடம் வரை இவ்வாறு துஆ செய்து வந்தேன். ஒரு நாள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

மக்ரிப் தொழுகைக்குப் பிறகு பள்ளிவாசலில் இருந்தேன். அப்போது ஒருவர் என்னிடம் வந்தார். அவருடைய தலையில் அரபியர்கள் அல்லாதவர்கள் தலைப்பாகை கட்டி இருப்பதைப் போன்று கட்டியிருந்தார். ஒட்டகத்தின் முடியினாலான ஜுப்பா (மேலாடை) அணிந்திருந்தார். அவர் என்னுடைய தோளில் தன்னுடைய கையை வைத்து என்னை சந்திப்பதற்கான தேவை உனக்கு ஏன் நேர்ந்தது? என கேட்டார். நீங்கள் யார் என்று நான் கேட்டேன். அதற்கு அவர் நான் தான் மஹ்தி என்று கூறியதும் நான் அவருடைய கையை முத்தமிட்டேன்.

(காயத்துல் மக்ஸூத், தொகுதி 2 பக்கம் 81)

இதில் பிற்காலத்தில் தோன்றக்கூடிய வாக்களிக்கப்பட்டவர் அரபி அல்லாதவர் என்பது தொடர்பான செய்தி கூறப்பட்டுள்ளது. இந்த சான்றை இதற்கு முன்னுள்ள சான்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது வாக்களிக்கப்பட்ட இமாம் இந்தியாவில் தோன்றுவார் என்பது தொடர்பான செய்தி அவர் தோன்றுவதற்கு முன்பே வெளியாகி விட்டது என்பது தெளிவாகிறது.

(10) ஹஸ்ரத் ஷேக் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் தொடர்பாக இவ்வாறு கூறப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கனவில் அன்னாருக்கு வழங்கிய வழிகாட்டுதலின்படி ஃபுஸூஸுல் ஹக்கம் என்ற ஒரு புத்தகத்தை எழுதினார்கள். அதில் வரக்கூடிய வாக்களிக்கப்பட்டவர் காத்தமுல் அவ்லியாவாகவும் (இறைநேசர்களில் சிறந்தவராகவும்) இருப்பார். அவர் இரட்டையர்களாக பிறப்பார். அவருக்கு முன்னால் ஒரு பெண் குழந்தை பிறக்கும். அதற்குப் பிறகு இவர் பிறப்பார் என்று முன்னறிவிப்பு செய்துள்ளார். இந்த முன்னறிவிப்பில் வரக்கூடிய வாக்களிக்கப்பட்டவர் காத்தமுல் அவ்லியாவாக இருப்பார் என்று கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது அவர் இரட்டையராக பிறப்பார். அவருக்கு முன் அவருடைய ஒரு சகோதரி பிறப்பார். அதன் பிறகு இவர் பிறப்பார். அவரது பிறக்குமிடம் ஸீன் ஆகும். அரபியில் அஸ்ஸீன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தையை அரபி மொழியில் அரபி அல்லாத இடம் அல்லது நீண்ட தொலைவில் உள்ள இடங்களுக்காக பயன்படுத்தப்படும். இங்கும் வாக்களிக்கப்பட்ட நபி மஹ்தி மஸீஹ் அவர்கள் பிறக்கக்கூடிய இடம் அரபு நாடு அல்லாத அல்லது தொலை தூரத்தில் உள்ள ஓர் இடத்தையே குறிக்கும் என்பதாகும்.

(ஃபஸூஸுல் ஹக்கம் பக்கம் 36, மொழிபெயர்ப்பு மவ்லானா முஹம்மது அலி ஹய்தர் ஆபாதி, ஹிஜ்ரி 1308ல் அச்சிடப்பட்டது)

### திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! எங்கள் (குறைபாடுகளாகிய) குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்புமீறுதகல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக. எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக, எங்களுக்கு உதவி செய்வாயாக என்று கூறியதைத் தவிர அவர்கள் எதுவும் கூறியதில்லை. (3:148)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்களின் மற்றொரு புத்தகமான ஃபதூஹாத்தே மகிய்யா என்ற புத்தகத்தில் மூன்றாவது தொகுப்பில் பிற்காலத்தில் தோன்றக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தோழர்கள் மற்றும் அன்னாரின் நெருக்கமானவர்கள் தொடர்பாக குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகிறார்:

அவர்கள் அனைவரும் அரேபிய நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்க மாட்டார்கள். அவர்களில் எவரும் அரேபியர்களாகவும் இருக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் அரபியில் பேசுவார்கள். அவர்களில் திருக்குர்ஆன் மனனம் செய்த ஹாஃபிழ் ஒருவர் இருப்பார். மேலும் அவர் அவர்களின் வம்சாவளியை சார்ந்தவராக இருக்க மாட்டார். ஏனென்றால் அவர் ஒருபோதும் இறைவனுக்கு கட்டுப்படாமல் இருந்ததே இல்லை. அந்த நபர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் சிறப்பிற்குரிய மந்திரியாகவும் மிகுந்த நம்பிக்கைகு உரியவராகவும் திகழ்வார்.

(ஃபதூஹாத்தே மகிய்யா, தொகுதி 3 பக்கம் 364,365)

சுப்ஹானல்லாஹ்! அல்லாஹ் தூய்மையானவன். இந்த முன்னறிவிப்பில் எங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளதோ அங்கு ஹஸ்ரத் ஹக்கீமுல் உம்மத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் கலீஃபத்துல் மஸீஹுல் அவ்வல் (ரலி) அவர்களைக் குறித்தும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

(11) முல்தானைச் சேர்ந்த மிகவும் பிரசித்தி பெற்ற இறைநேசரும் மார்க்க அறிஞருமான ஹஸ்ரத் ஷேக் அப்துல் அஸீஸ் பஹார்வி (ரஹ்) அவர்கள் இறை இல்ஹாம் மூலம் செய்தியைப் பெற்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு சான்றாக விளங்கிய சூரிய, சந்திர கிரகண நிகழ்வு தொடர்பாக இவ்வாறு முன்னறிவிப்பு செய்துள்ளார்:

ஹிஜ்ரி 1311 ஆம் ஆண்டில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் ஒன்றாக ஒரே மாதத்தில் கிரகணம் ஏற்படும். மேலும் இந்த அடையாளமானது உண்மையான மஹ்தி மற்றும் பொய்யான தஜ்ஜாலுக்கிடையே உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்வதற்கான காரணியாக இருக்கும். இந்த முன்னறிவிப்பில் சூரிய சந்திர கிரகணம் ஹிஜ்ரி 1311ல் அது நிகழும் என்று கூறப்பட்டுள்ளது. அதைப்போன்று 1894 ஆம் ஆண்டு இந்த அடையாளம் நிகழ்ந்து விட்டது.

இவை (உம்மத்தே முஹம்மதிய்யா) முஹம்திய்ய சமுதாயத்தில் தோன்றிய அறிஞர்களின் எப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த முன்னறிவிப்புகள் என்றால் அவை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை உலகத்திற்கு பறைசாற்றிக் கொண்டே இருக்கும். எல்லாம் வல்ல அல்லாஹ் கடந்த கால சான்றோர்களால் கூறப்பட்ட இந்த கருத்துக்களை அனைத்து இஸ்லாமிய நாடுகளும் திறந்த உள்ளத்துடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை உலகிலுள்ள அதிகமான மக்கள் ஏற்றுக் கொள்ளட்டுமாக. ஆமீன்

......☆......☆......☆......



மஸ்ஜித் முபாரக் (இஸ்லாமாபாத், U.K)



மஸ்ஜித் ஃபஸல் (இலண்டன், U.K)



மஸ்ஜித் நுஸ்ரத் ஜஹான் (டென்மார்க்)




மஸ்ஜித் அக்ஸா (ரப்வா, பாகிஸ்தான்)



மஸ்ஜித் மஸ்ரூர் (அமெரிக்கா)



மஸ்ஜித் பைத்துல் அஹது (ஜப்பான்)



மஸ்ஜித் பைத்துஸ் ஸமது (அமெரிக்கா)



மஸ்ஜித் பைத்துல் ஹமீது (ஜெர்மனி)

உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் இன்று உலகில் 213 நாடுகளில் நிலைபெற்றிருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ். உலகின் பல்வேறு நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக கட்டப்பட்டுள்ள சில பள்ளிவாசல்களின் அழகிய நிழற்படங்கள்

**EDITOR**
Moulavi. O.M. MUZZAMMIL AHMAD

**SUB EDITOR**
Moulavi. Abdurrahman Tahir
Mobile : +91 88381 58410
+91 96774 14441

Email : subeditorbadrtamil@gmail.com
Website: www.akhbadrbadrqadian.in

Registered with the registrar of the newspapers for India at No. RN 61/57

ہفت روزہ بدر قادیان

**Weekly BADAR Qadian**

Qadian - 143516 Distt. Gurdaspur (Pb.) INDIA

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

**Vol. 70 Thursday 04 - 11 March - 2021 Issue.09,10**

**MANAGER**
**SHAIKH MUJAHID AHMAD**
Mobile : +91 99153 79255
e-mail:managerbadrqnd@gmail.com

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் டமாஸ்கஸின் கிழக்குப் பக்கம் மினாராவிற்கு அருகில் இறங்குவார் என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

**நண்பர்களே! ஹதீஸிற்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தின் நினைவுச் சின்னமாக இருப்பதற்கு இந்த மினாரா தயார் செய்யப்படுகிறது.**

### இந்த மினாரத்துல் மஸீஹும் டமாஸ்கஸிலிருந்து கிழக்குப் பக்கம் அமைந்துள்ளது



ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நண்பர்களே! ஹதீஸிற்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தின் நினைவுச் சின்னமாக இருப்பதற்கு இந்த மினாரா தயார் செய்யப்படுகிறது. மேலும் سُبۡحٰنَ الَّذِیۡۤ اَسۡرٰی بِعَبۡدِہٖ لَیۡلًا مِّنَ الۡمَسۡجِدِ الۡحَرَامِ اِلَی الۡمَسۡجِدِ الۡاَقۡصَا الَّذِیۡ بٰرَکۡنَا حَوۡلَہٗ என்ற திருக்குர்ஆன் வசனத்தின் மகத்துவமிக்க முன்னறிவிப்பு முழுமையாகி விட வேண்டும் என்பதற்காகவும் ஆயத்தம் செய்யப்படுகிறது. மேலும் மஸீஹ் மினாராவுக்கு அருகில் இறங்குவார் என்று அந்த மினாராவைப் பற்றி ஹதீஸிலும் குறிப்பு உள்ளது. முஸ்லிம் (ஹதீஸ்) நூலில் இடம் பெற்றுள்ள ஹதீஸில் டமாஸ்கஸை பற்றிய குறிப்பும் உள்ளது. அதனுடைய நோக்கம் என்னவென்றால், முத்தெய்வக் கோட்பாட்டின் விதை முதன் முதலில் டமாஸ்கஸில் தான் விதைக்கப்பட்டது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவதன் நோக்கம் என்னவென்றால், முத்தெய்வக் கோட்பாட்டின் சிந்தனைகளை அழித்து உலகில் ஏக இறைவனின் கம்பீரத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதாகும். எனவே டமாஸ்கஸிலிருந்து கிழக்குப் பக்கம் அமைந்துள்ள மினாரத்துல் மஸீஹிற்கு அருகில் இறங்குவார் என்பதில் இந்த விஷயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த விஷயம் சரியாகும். ஏனென்றால், பஞ்சாபிலுள்ள குர்தாஸ்பூர் மாவட்டத்தில் காதியான் அமைந்துள்ளது. அது டமாஸ்கஸிலிருந்து முற்றிலும் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. எனவே இந்த மினாரத்துல் மஸீஹும் டமாஸ்கஸிலிருந்து கிழக்குப் பக்கம் அமைந்துள்ளது என்பது நிரூபணமாகிறது. எனவே டமாஸ்கஸ் என்ற சொல்லை சீர்தூக்கிப் பார்த்து அதில் என்ன ஹிக்மத் (ஞானம்) உள்ளது என்பதை உண்மையை தேடுகின்ற ஒவ்வொரு நபரும் ஆய்வு செய்ய வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் டமாஸ்கஸிலிருந்து கிழக்குப் பக்கம் இறங்குவார் என்று எழுதப்பட்டுள்ளது. இப்போது எமது எதிரிகள் இந்த டமாஸ்கஸ் (பற்றி கூறப்படும்)ஹதீஸை திரும்பத் திரும்ப படித்தபோதிலும் அவர்கள் வெறும் ஒரு கதையாகவே அந்த ஹதீஸை புரிந்து வைத்துள்ளார்கள். ஆனால் இது வெறும் ஒரு கதையல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இறைவன் வீணான காரியங்களிலிருந்து தூய்மையானவன் ஆவான். இன்னும் கூறப்போனால், டமாஸ்கஸ் என்ற சொல் இடம் பெற்றுள்ள அந்த ஹதீஸில் ஒரு இரகசியம் பொதிந்துள்ளது. மேலும் கிழக்குப் பக்கம் ஒரு வெள்ளை மினாரா என்றும் கூறப்பட்டுள்ளது. நான் தற்போது எடுத்துரைத்த மினாரா தான் அந்த மினாரா ஆகும். அதாவது முத்தெய்வக் கோட்பாட்டிற்கான அடிக்கல் டமாஸ்கஸில் தான் நாட்டப்பட்டது. இந்த மாபெரும் இணை வைத்தல் எனும் பெரும் விளைநிலம் முதலில் டமாஸ்கஸில் தான் அமைக்கப்பட்டது. பின்னர் அது வளர்ந்தது. மலர்ந்தது. அதன் பிறகு இந்த விஷம் மேலும் பல இடங்களுக்கு பரவியது. எனவே மனிதனை இறைவனாக்குவதற்கான அடித்தளம் முதலில் டமாஸ்கஸில் தான் அமைந்திருந்தது என்பதை இறைவன் அறிந்திருந்தான். எனவே இறைவனுடைய தன்மானம் அந்தப் பொய்யான போதனையை அழித்து விடும் காலத்தை குறிப்பிட்டு விட்டு பின்னர் டமாஸ்கஸையும் இறைவன் குறிப்பிட்டிருக்கின்றான். மேலும் மஸீஹின் மினாரா என்றும் கூறியுள்ளான். அதாவது அவரது ஒளி வெளிப்படக்கூடிய இடம் டமாஸ்கஸிலிருந்து கிழக்குப் பக்கம் அமைந்துள்ளது என்பதாகும். இந்த வாக்கியத்திலிருந்து அந்த மினாரா டமாஸ்கஸின் ஓர் அங்கம் என்றோ அல்லது அந்த மினாரா டமாஸ்கஸில் அமைந்துள்ளது என்றோ பொருளல்ல. ஆனால் துரதிஷ்டவசமாக அவ்வாறே புரியப்பட்டுள்ளது. இன்னும் கூறப்போனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஒளி, சூரியனைப் போன்று டமாஸ்கஸிலிருந்து கிழக்குப் பக்கம் உதயமாகி மேற்கிலுள்ள இருளை அகற்றும் என்பதே அதன் பொருளாகும். இதில் ஒரு நுட்பமான கருத்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஏனென்றால், மஸீஹ் இறங்கக்கூடிய மினாராவை டமாஸ்கஸின் கிழக்குப் பக்கம் என்று கூறப்பட்டிருக்கின்றது. மேலும் டமாஸ்கஸின் கிறிஸ்துவக் கொள்கை கோட்பாட்டை அதன் மேற்குப் பக்கம் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு எதிர்வரும் காலத்தைக் குறித்து இவ்வாறு முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றும்போது கிழக்கில் உதிக்கும் சூரியனைப் போன்று அவர் வெளிப்படுவார். அவருக்கு எதிரில் மேற்குப் பக்கம் அமைந்துள்ள திரித்துவ விளக்கு முற்றிலும் அணைந்து மரணித்து விடும். ஏனென்றால் இறைவனின் வேதங்களில் கிழக்கிலிருந்து வெளிப்படுவது என்பது வெற்றியின் அடையாளமாக கூறப்பட்டுள்ளது. மேலும் மேற்கு நோக்கி செல்வது வீழ்ச்சியின் அடையாளமாக கூறப்பட்டுள்ளது.(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 287–294)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian Distt. Gsp-143516, Punjab. India Editor:Mansoor Ahmad

جمیل احمد ناصر، پرنٹر وپبلشر نے فضل عمر پرنٹنگ پریس قادیان میں چھپوا کر دفتر اخبار بدر قادیان سے شائع کیا۔ پروپرائیٹر:۔نگران بدر بورڈ قادیان